Find us on facebook/tamilmirror    Follow us on tamilmirror    epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, SEPTEMBER 21, 2021

செவ்வாய்க்கிழமை செப்டெம்பர் 21, 2021 | ஒளி: 07 கதிர்: 106 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# தமிழ் இளைஞர்களை விடுவிக்க தயங்கேன்

**அன்டனியோ குட்டரெஸிடம் எடுத்துரைத்தார் ஜனாதிபதி**

**மத தீவிரவாதம் குறித்து எச்சரிக்கை**

**உலக நாடுகளுக்கு ஜனாதிபதி ஆருடம்**

**புலம்பெயர் தமிழர்களுடன் பேசத் தயார்**

**நியூயோர்க்கிலிருந்து ஜனாதிபதி அழைப்பு**



பயங்கரவாத செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில், கைது செய்யப்பட்டிருந்த இளைஞர்கள் பலரை தான், ஆட்சிக்கு வந்ததன் பின்னர் விடுவித்ததாக ஐ.நா பொதுச் செயலாளர் அன்டனியோ குட்டரெஸிடம் எடுத்துரைத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நீண்ட காலம் தடுப்பில் இருந்ததைக் கருத்திற்கொண்டு, ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் பேரில் அவர்களை விடுவிப்பதற்குத் தான் தயங்கப் போவதில்லை என்றும் கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2

## பிறந்து ஐந்தே நாள்களான இரட்டை சிசுக்களில் ஒன்று கொரோனாவுக்கு மரணம்

சுமணசிறி குணதிலக



மொனராகலை மாவட்ட வைத்தியசாலையில், 21 வயதான தாயொருவர் பிரசவித்த இரட்டைக் குழந்தைகளுள் ஒன்று, பிறந்து 5 நாள்களில் கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளது.

மொனராகலை, ருப்பெத்த பிரதேசத்தைச் சேர்ந்த அந்த தாய், 13ஆம் திகதி பிரசவத்துக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அன்றே இரட்டைக் குழந்தைகளை பிரசவித்துள்ளார்.


எனினும் பிரசவத்தின் பின்னர் நான்கு நாள்கள் கடந்து, தாய்க்கு செய்யப்பட்ட பி.சி. ஆர் பரிசோதனைகளில் தாய்க்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

## அவர்களுக்குப் பிணை

நாடளாவிய ரீதியில் மதுபானசாலைகள் திறக்கப்பட்டதை கண்டித்தும் ஏனைய வர்த்தக நிலையங்களை திறப்பதற்கு அனுமதியளிக்குமாறு வலியுறுத்தி, கொழும்பு கோட்டை ரயில் நிலையம் முன்பாக நேற்றுமுன்தினம் (19) ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களில் சிலர் கைது செய்யப்பட்டனர்.

அவ்வாறு கைது செய்யப்பட்ட ஐக்கிய தேசிய சுயதொழில் வர்த்தக சங்கத்தின் தலைவர் சார்ள்ஸ் பிரதீப் உள்ளிட்டோருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

## தடுப்பூசி அட்டை கட்டாயமா?




கொரோனா தடுப்பூசி அட்டையை வைத்திருப்பது கட்டாயமாக்குவதற்கான சாத்தியக்கூறுகளை அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர் என சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

சட்டரீதியான விஷயங்கள் உட்பட, அத்தகைய நடவடிக்கையை அமல்படுத்துவதற்கான அனைத்து அம்சங்களும் தற்போது ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன எனத் தெரிவித்துள்ள அவர், அனைவருக்கும், முழுமையான தடுப்பூசி

தொடர்ச்சி P2

## குளத்தில் குதித்து குளித்தவரும் மீட்க பாய்ந்தவரும் மரணித்தனர்

**வட்டவளையில் சம்பவம்; மூவர் தப்பினர்**



இரா.யோகேசன்

வட்டவளை, லொனெக் பிரதேசத்தில் உள்ள குளமொன்றில் குளிக்கச் சென்ற இருவர், நேற்று முன்தினம் (19) மாலை நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்த இருவரின் சடலங்களும் நேற்று (20) காலை லக்ஸபான இராணுவ முகாமைச் சேர்ந்தவர்களால் மீட்கப்பட்டுள்ளது.

வட்டவளை, லொனெக் தோட்டத்தைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான 38 வயதுடைய சின்னையா ராஜா, சிலாபம்- விலந்தல பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதான ஷவிந்த தில்சான் ஆகியோரே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.





தொடர்ச்சி P2



## பிரதமர் நாடு திரும்பினார்


உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இத்தாலிக்குச் சென்றிருந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினர் நாடு திரும்பியுள்ளனர். ஸ்ரீ லங்கன் விமானச் சேவைக்கு சொந்தமான யுஎல் 309 விமானத்தில் தூதுக்குழு நேற்று (20)காலை நாட்டை வந்தடைந்தனர்.

தொடர்ச்சி P2

## துப்பாக்கிச் சூட்டில் 14 வயது சிறுவன் பலி

வீரகெட்டிய பகுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 14 வயதான சிறுவன் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவித்த பொலிஸார், சம்பவம் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இரு தரப்பினருக்கிடையில் ஏற்பட்ட மோதலின் போது, துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ, துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்ட நபரை கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக தெரிவித்தார்.

## ஜகத்குமாரவே அரசியல் ரீதியில் அழுத்தங்களை பிரயோகித்தார்



ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் எடுக்கும் தீர்மானங்கள் அரசாங்கத்தில் உள்ள ஒரு சில அமைச்சர்களின் முட்டாள்தமான செயற்பாடுகளால் பலவீனமடைவதாகத் தெரிவித்துள்ள பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, பாதுக்க பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி விவகாரத்தில் எவ்வித அரசியல் தலையீடும் காணப்படவில்லை. ஜகத்குமாரவே, அரசியல் ரீதியில் அழுத்தம் பிரயோகித்தார் என்றார்.

தொடர்ச்சி P2


## விடத்தல் தீவில் 15 பேர் வீடு புகுந்து அட்டகாசம்

**சிறுமி உட்பட மூவர் படுகாயம்**

எஸ்.றொசேரியன் லெம்பேட்

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட விடத்தல் தீவு, 5ஆம் வட்டாரம் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள், நேற்று முன்தினம் (19) மாலை 6.30 மணியளவில், மது போதையில் அத்துமீறி நுழைந்த சுமார் 15 பேர்

தொடர்ச்சி P2





## கொரோனாவால் உயிரிழந்தவருக்கு வீட்டில் அஞ்சலி செலுத்த அனுமதித்ததால் சிக்கல்


சுப்பிரமணியம் பாஸ்கரன்

கொரோனா தொற்றால் உயிரிழந்தவரை அவருடைய வீட்டுக்குக் கொண்டு சென்று, மக்கள் அஞ்சலி செய்ய அனுமதித்த சம்பவமொன்று, கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

## பிறந்தநாள் கொண்டாட்டம் 35 பேருக்கு எதிராக நடவடிக்கை

எம்.றொசாந்த்



தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறி, யாழ்ப்பாணம், திருநெல்வேலி, ஆனைக்கோட்டை ஆகிய பகுதிகளில், பிறந்தநாள் கொண்டாட்டம் நடத்திய 35 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

திருநெல்வேலி பகுதியில் உள்ள பிரபல விடுதியில், பிறந்தநாள் கொண்டாட்டத்தில் ஈடுபட்ட 20 பேரும், ஓட்டுமடம் பகுதியில் உள்ள வீடொன்றில் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் ஈடுபட்ட 15 பேரும் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், சுகாதார பிரிவினரும் யாழ்ப்பாணப் பொலிஸாரும், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

## புஷ்பிகாவை தெரியாது



“இந்த மாதம் 12ஆம் திகதி, நான் வெலிக்கடை சிறைச்சாலைக்கு சென்றேன்” எனத் தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, ஆனால் தான் சிறைச்சாலைக்கு செல்லும் போது, பெண் ஒருவரையோ நண்பர்களையோ அழைத்துச் செல்லவில்லை என தெரிவித்துள்ளார். வெலிக்கடை சிறைச்சாலையிலுள்ள

தொடர்ச்சி P2

## தடுப்பூசி பெறுவதில் காலந்தாழ்த்த வேண்டாம்



தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதில் காலந்தாழ்த்த வேண்டாம் எனக் கேட்டுக்கொண்டுள்ள அரசாங்கம், முதலாவது டோஸ் மருந்தை இதுவரையிலும் பெற்றுக்கொள்ளாதவர்கள் இன்னும் ஒரு வாரத்துக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளது. ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க

தொடர்ச்சி P2



## யாழ். சிறைக்குள் கொரோனா கொத்தணி?

எம்.றொசாந்த்

யாழ். சிறைச்சாலையில், 34 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக, சுகாதாரப் பிரிவு தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த 16ஆம் திகதியன்று, யாழ். சிறைச்சாலையில் உள்ள 39 பேரிடம் பெறப்பட்ட பி.சி. ஆர் மாதிரிகள், யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் (19) பரிசோதிக்கப்பட்டன.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# தமிழ் இளைஞர்களை விடுவிக்க தயங்கேன்

ஐக்கிய நாடுகள் சபையுடன், எப்போதும் மிக நெருக்கமாகப் பணியாற்றத் தயாரென எடுத்துரைத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டுக்குள் மீண்டும் பிரிவினைவாதம் ஏற்படப்போவதில்லை என்பதையும் உறுதிப்படுத்தினார். ஆனால், மதவாதத் தீவிரவாதம் தொடர்பில், அரசாங்கம் என்ற ரீதியில் இலங்கை போன்று ஏனைய நாடுகளும் அவதானமாக இருக்க வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 76ஆவது பொதுச் சபைக் கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக சென்றிருக்கும் ஜனாதிபதி, நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் சபைத் தலைமையகத்தில், ஐ.நா பொதுச் செயலாளர் அன்டனியோ குட்டரெஸை நேற்று (20) சந்திதுப் பேச்சுவார்த்தை நடத்தினார். இதன்போதே மேற்கட்டவாறு எடுத்துரைத்துள்ளார்.

பொதுச் சபைக் கூட்டத்தொடர், இன்று (21) ஆரம்பமாகும். அதன் இரண்டாவது அமர்வில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உரையாற்றவுள்ளார்.

இந்நிலையில், இனங்களுக்கிடையில் ஒற்றுமையை பலப்படுத்திக்கொண்டு முன்னோக்கி நகர்வதற்கான முழுமையான ஒத்துழைப்பை, மிகவும் நேர்மறையான முறையில் ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்கு வழங்குமென்று, அன்டனியோ குட்டரெஸ், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தெரிவித்தார்.

சர்வதேச பாராளுமன்றச் சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி இலங்கைக்குத் தான் 1978ஆம் ஆண்டில், விஜயம் செய்திருந்ததையும் கண்டி, அநுராதபுரம், பொலன்னறுவை, திருகோணமலை ஆகிய பிரதேசங்களுக்குச் சுற்றுலா சென்றதையும், அதன்போதான அழகான நினைவுகளையும் அன்டனியோ குட்டரெஸ் ஞாபகப்படுத்தினார்.

சுமார் 30 ஆண்டுகள் நிலவிய யுத்தம் காரணமாக, மிகவும் சிக்கலான நிலைமைக்கு விழவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டாலும், இந்து சமுத்திர வலயத்தில், மாபெரும் சமூக, பொருளாதாரப் பணிகளை நிறைவேற்றும் இலங்கையிடமிருந்து, தொடர்ந்தும் அப்பணியை எதிர்பார்ப்பதாக, பொதுச் செயலாளர் எடுத்துரைத்தார்.

ஐ.நா பொதுச் செயலாளருடன் கலந்துரையாடக் கிடைத்தமையிட்டு தான் மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்த ஜனாதிபதி தனது பாராட்டுகளை தெரிவித்துக்கொண்டார்.

சிறிய பொருளாதாரத்தைக் கொண்டுள்ள இலங்கை போன்ற நாடொன்று, கொவிட் தொற்றுப் பரவலுக்கு மத்தியில் முகங்கொடுத்துள்ள சவால்கள் தொடர்பில், ஜனாதிபதி ராஜபக்ஷ, ஐ.நா பொதுச் செயலாளருக்கு எடுத்துரைத்தார்.

கொவிட் தொற்றுப் பரவலுக்கு மத்தியில், இலங்கையின் கல்வி மற்றும் பொருளாதாரத்துக்கு ஏற்பட்டுள்ள பாரிய அச்சுறுத்தல்கள் தொடர்பிலும் தீர்க்கமான முறையில் எடுத்துரைத்த ஜனாதிபதி, தொற்றுப்பரவலை வெற்றிகரமாக எதிர்கொள்ள, உலக சுகாதார ஸ்தாபனம் வழங்கி வரும் ஒத்துழைப்புக்கும், பாராட்டினார்.

இதுவரையில், இலங்கையின் மொத்தச் சனத்தொகையில் அரைவாசிக்கும் மேற்பட்டோருக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி , நவம்பர் இறுதிக்குள், 15 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி ஏற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று, எடுத்துரைத்தார்.

இதன்போது, தடுப்பூசி ஏற்றலில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்துக்கு, பொதுச் செயலாளர், தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

ஏனையோர் தொடர்பான வழக்கு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டு வருவதாகவும் நீண்ட காலமாகத் தடுப்பிலுள்ள தமிழ் இளைஞர்கள் தொடர்பிலான சட்டச் செயற்பாடுகள் முடிவடைந்த பின்னர், நீண்ட காலம் தடுப்பில் இருந்ததைக் கருத்திற்கொண்டு, ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் பேரில் அவர்களை விடுவிப்பதற்குத் தான் தயங்கப் போவதில்லை என்றும், பொதுச் செயலாளரிடம் தெரிவித்தார்.

இலங்கைக்குள் மிகவும் பலமான முறையில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதே தன்னுடைய இலக்கு என்றும் அதன்படி, போராட்டக்காரர்கள் மீது முன்னரைப் போன்று தடியடி, நீர்த்தாரைத் தாக்குதல் போன்றவற்றை நடத்த, தன்னுடைய ஆட்சியின் கீழ் ஒருபோதும் அனுமதியில்லை.

போராட்டங்களில் ஈடுபடுபவர்களுக்கு தன்னுடைய அலுவலகத்துக்கு முன்னால் தனி இடமொன்று ஒதுக்கப்பட்டுள்ளது. நாட்டுக்குள் அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக, சிவில் அமைப்புகளுடன் இணைந்து தான் செயற்படும் விதம் தொடர்பிலும், ஜனாதிபதி கோட்டாபய தெளிவுபடுத்தினார்.

இலங்கையின் உள்ளகப் பிரச்சினைகள், நாட்டுக்குள்ளேயே உள்ளகப் பொறிமுறையினூடாகத் தீர்க்கப்பட வேண்டுமென்றும் அதற்காக, புலம்பெயர் தமிழர்களுடனான பேச்சுவார்த்தைக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அழைப்பு விடுத்தார்.

ஐக்கிய நாடுகள் சபையுடன், எப்போதும் மிக நெருக்கமாகப் பணியாற்றத் தயாரென மீண்டுமொருமுறை எடுத்துரைத்த ஜனாதிபதி நாட்டுக்குள் மீண்டும் பிரிவினைவாதம் ஏற்படப்போவதில்லை என்பதைத் தன்னால் உறுதிப்படத் தெரிவிக்க முடியுமென்ற போதிலும், மதவாதத் தீவிரவாதம் தொடர்பில், அரசாங்கம் என்ற ரீதியில் இலங்கை போன்று ஏனைய நாடுகளும் அவதானமாக இருக்க வேண்டுமென்று எடுத்துரைத்தார்.

## இரட்டை சிசுக்களில் ஒன்று கொரோனாவுக்கு மரணம்

இதனையடுத்து, இரண்டு சிசுக்களில் ஒன்று கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளமை பி.சி. ஆர் பரிசோதனைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து மற்றைய சிசுவின் மாதிரிகள் பி.சி. ஆர் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ள நிலையில், அதன் அறிக்கை நேற்று (20) வரை கிடைக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள அச்சிசுக்களின் தந்தை, தனது மனைவி கொரோனா தடுப்பூசியின் முதலாவது டோஸைப் பெற்றுள்ளதுடன், அவர் வைத்தியசாலைக்குள் அனுமதிக்கும் முன்னர் அவருக்கு தொற்று ஏற்படவில்லை என்றும், வைத்தியசாலையில் வைத்தே அவருக்கு தொற்று பரவியிருக்கலாம் என்று சந்தேகிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## தடுப்பூசி அட்டை கட்டாயமா?

போடப்பட்ட பின்னரே தடுப்பூசி அட்டையை கட்டாயமாக்குவது தொடர்பில் உரிய நடவடிக்கை அமல்படுத்தப்படும் என்றார்.

இதேவேளை, 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி போடுவதற்காக வீட்டுக்குச் சென்று தடுப்பூசியை செலுத்தும் செயற்றிட்டம் மென்மேலும் துரிதப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஜகத்குமாரவே அரசியல் ரீதியில் அழுத்தங்களை பிரயோகித்தார்

பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார கடந்த 17 ஆம் திகதி இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போது அமைச்சர் சரத் வீரசேகர தொடர்பில் குற்றஞ்சாட்டினார். இக்குற்றச்சாட்டு தொடர்பில் பதிலளிக்கும் போதே, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, நேற்று (20) மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

ஜகத் குமார எம்.பி சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை. பாதுக்க பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மீது சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டின் அடிப்படையிலே அவருக்கு இடம்மாற்றம் வழங்கப்பட்டது.

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக்கு அமையவே, பொலிஸ்மா அதிபரால் அவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது. இதற்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது.

பாதுக்க பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக, தனக்கு நெருக்கமானவர் ஒருவரை நியமிக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார என்னிடம் உத்தியோகப்பூர்வமாக கோரிக்கை விடுத்தார்.

பொலிஸ்மா அதிபரின் ஆலோசனைக்கு அமைய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை நியமிக்கும் அதிகாரம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு உண்டு என அரச சேவைகள் ஆணைக்குழு தெளிவாக குறிப்பிட்டுள்ளது.

பாதுக்க பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி விவகாரத்தில் எவ்வித அரசியல் தலையீடும் கிடையாது. அரசியல் அழுத்தத்தை பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமாரவே பிரயோகித்தார்.இவருக்கு ஆதரவானவரை நியமிக்காததன் காரணமாக பொய்யுரைக்கிறார். ஆகவே இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை முன்னெடுக்குமாறு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவிடம் உத்தியோகபூர்வமாக வலியுறுத்தியுள்ளேன் என்றார்.

## குளத்தில் குதித்து குளித்தவரும் மீடக பாய்ந்தவரும் மரணித்தனர்

குறித்த இருவரும் வட்டவளை லொனெக் தோட்டத்திலுள்ள பாற்பண்ணையின் கட்டட நிர்மாணிப்பு பணிகளில் ஈடுபட்டு வந்தவர்கள் என்றும் நேற்று முன்தினம் (19) மாலை குறித்த இருவரும் மேலும் மூவருடன் குளத்துக்குக் குளிக்கச் சென்ற போதே, இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முதலில் சின்னையா ராஜா நீரில் மூழ்குவதை அவதானித்த தில்சான் குளத்தில் பாய்ந்து அவரைக் காப்பாற்றச் சென்ற போதே, இருவரும் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

நீரில் மூழ்கி இருவரையும் தேடும் பணிகள் தோட்ட மக்களால் முன்னெடுக்கப்பட்ட போதும் அம்முயற்சிகள் கைகூடாத நிலையில், நேற்று (20) காலை லக்ஸபான இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் உதவியை நோட்டன் பிரிட்ஜ் பொலிஸார் பெற்றனர்.

இதற்கமைய மீட்கப்பட்ட சடலங்கள் இரண்டும் பிரேத பரிசோதனைக்காக கிளங்கன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன எனத் தெரிவித்த பொலிஸார், அவ்விருவருடன் சென்றிருந்த ஏனைய மூவரிமும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தனர்.

## பிரதமர் நாடு திரும்பினார்

இத்தாலியின் பொலொக்ஞா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஜீ20 சர்வதேச மாநாட்டில் பங்கேற்பதாக, பிரதமர் உள்ளிட்ட குழுவினர் கடந்த 10 ஆம் திகதி இத்தாலிக்குச் சென்றிருந்தனர்.

மாநாட்டில் தலைமை உரை நிகழ்த்துதல் மற்றும் இராஜதந்திர சந்திப்புகள் என்பன இந்த விஜயத்தின் போது இடம்பெற்றதாக பிரதமர் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

20 வருட சேவையை நிறைவு செய்த பின்னர் இத்தாலி அரசாங்கத்தினால் இலங்கையர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதிய கொடுப்பனவை நாடு திரும்பிய பின்னரும் பெற்றுக் கொடுப்பதற்கான இயலுமை குறித்து இத்தாலி அரசாங்கத்துடன் கலந்துரையாடுமாறு பிரதமரால் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

## 15 பேர் வீடு புகுந்து அட்டகாசம்

கொண்ட குழுவினர், குறித்த வீட்டில் உள்ளவர்கள் அனைவரையும் கடுமையாக தாக்கிவிட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

இதில், குறித்த வீட்டின் உரிமையாளரான அன்டனி ஜோசப் (வயது 44) என்பவர் படுகாயமடைந்த நிலையில், பள்ளமடு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மேலும் குறித்த வீட்டில் உள்ள 18 வயதுடைய இதய நோய் உள்ள யுவதி ஒருவரும், 15 வயதுடைய சிறுமி ஒருவரும் தாக்குதலுக்குள்ளான நிலையில், பள்ளமடு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில், அடம்பன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## புஷ்பிகாவை...

தான் சென்றதாக தெரிவித்துள்ள அவர், இதன்போது தான் மதுபோதையில் இருக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேபோல் தான் சிறைச்சாலைக்கு அழைத்து சென்றதாகக் கூறப்படும் புஷ்பிகா என்ற பெண்ணை தனக்கு யாரென்றே தெரியாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




## கொரோனா கொத்தணி?

அதன் முடிவுகளின் அடிப்படையில், 34 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அதில் 22 வயதான இளம் பெண்ணும் உள்ளடங்கியுள்ளார்.

## வீட்டில் அஞ்சலி செலுத்த அனுமதித்ததால் சிக்கல்

கிளிநொச்சி, உதயநகர் கிழக்கு பகுதியைச் சேர்ந்த முன்னாள் கிராம அலுவலர் ஒருவர், கொரோனா தொற்றால், கடந்த 16ஆம் திகதியன்று, கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இந்நிலையில், சனிக்கிழமை (18) இரவு, அவருடைய இறுதி நிகழ்வுகள், அவரின் வீட்டில் நடைபெறும் என்று ஒலிபெருக்கி ஊடாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த விடயம் தொடர்பில் சமூக ஆர்வலர்களாலும் அரச உத்தியோகத்தர்களாலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

கொரோனாவால் ஏற்கெனவே தனிமைப்படுத்தப்பட்டுள்ள குறித்த அலுவலகரின் உறவினர்கள் வீட்டில், கொரோனாவால் உயிரிழந்தவரின் சடலத்தை மக்கள் அஞ்சலிக்காக அனுமதிக்கின்ற போது, அங்கு செல்கின்ற மக்கள் ஊடாக மீண்டும் கொரோனா பரவல் ஏற்படும் அபாயம் உள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டது.

இருந்தபோதிலும் நேற்று முன்தினம் (19) காலை 7 மணியளவில், அவரின் சடலம், வவுனியா, பூந்தோட்டம் மயானத்துக்கு எடுத்துச் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டு, எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றது.


இருந்தபோதிலும், அந்த வாகனம் வவுனியாவுக்குச் செல்வதற்கு பதிலாக, உதயநகர் கிழக்கில் உள்ள அவருடைய வீட்டுக்குச் சென்றுள்ளது. அங்கு நூற்றுக்கணக்கான மக்கள், அஞ்சலி செலுத்துவதற்காகத் திரண்டிருந்துள்ளனர்.

குறிப்பிட்ட நேரத்தின் பின்னர் அங்கிருந்து புறப்பட்ட வாகனம், மீளவும் வவுனியாவுக்குச் சென்றிருக்கின்றது.

இதையடுத்து, இது தொடர்பில், வைத்திய அதிகாரி பிரிவுக்கு கிராம மட்ட அரச அதிகாரிகள் தகவல் வழங்கியுள்ளனர். இவ்வாறு தகவல் வழங்கியோருக்கு, மரணவீடு நடத்தியவருக்கு நெருங்கிய உறவினர்களில் ஒருவரான அரச உயர் அதிகாரி உட்பட்ட பலரால் தொலைபேசி ஊடாக எச்சரிக்கப்பட்டிருப்பதும் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின், மைத்துனர்கள் மூவர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் வைத்தியர்களாகவும் மருமகன் கண்டாவளை பிரதேச செயலகத்தின் திட்டப்பணிப்பாளராகவும் கடமையாற்றி வருகின்றனர்.

## தடுப்பூசி பெறுவதில் காலந்தாழ்த்த வேண்டாம்



அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன கருத்துதெரிவிக்கையில்,

30 வயதுக்கு மேற்பட்டவர்களில் பலரும் தடுப்பூசியை செலுத்திக்கொள்ளாமல் இருக்கின்றனர்; இல்லையெனக் கூறமுடியாது. ஆகையால் அடுத்த ஒரு வாரத்துக்குள் அவ்வாறானவர்கள் தங்களுக்குரிய தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுங்கள். காலந்தாழ்த்த வேண்டாம்!

30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு முதலாவது தடுப்பூசியை செலுத்தும் செயற்றிட்டத்தை தங்களால் தொடர்ச்சியாக முன்னெடுத்துகொண்டிருக்க முடியாது எனத் தெரிவித்த அவர், விரைவாக நிறைவு செய்யவேண்டும். ஆகையால், இன்னும் சில நாள்களுக்குள் அந்தத் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளவும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

அதேபோல, 20 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்களும் விரைவில் வந்து தங்களுக்குரிய தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுங்கள் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

நாட்டில் நிலையான கொள்கை இல்லை:

# நாட்டை விட்டு வெளியேற நினைக்கிறார்கள்

சிங்கப்பூர், ஜப்பான் ஆகிய நாடுகள் கொண்டிருப்பதைப் போல, நிலையான கொள்கை ஒன்றை இலங்கை கொண்டிருக்க வேண்டும். இதேவேளை, நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என நாட்டின் மாணவர்கள் நினைக்கிறார்கள் என முன்னாள் பிரதமரும் ஐ.தே.கவின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில், சிங்கப்பூர், ஜப்பான் ஆகிய நாடுகளின் வளர்ச்சிக்கு, அந்நாட்டில் உள்ள ஸ்திரமான கொள்கைகளே காரணம். இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்ற வேண்டும் என்றால், அதுபோன்ற கொள்கைகளைச் சட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தனது சிறிய ஆட்சிக்காலத்தில் சிங்கப்பூரிலிருந்து வந்தவர்கள், நாட்டிலுள்ள துறைமுகங்களில் பணிபுரிந்ததாகவும், எனினும் சிங்கப்பூருக்கு வீட்டு வேலைகளுக்கு இலங்கையர்கள் செல்லும் நிலையே தற்போது காணப்படுவதாகவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரம்கொண்ட முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனவின் ஆட்சிக் காலத்தில் நாட்டில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பெண்களின் உரிமைகளை முன்னோக்கிக் கொண்டுவந்தார்.

இலங்கைக்குப் பின்னரே சீனாவில் திறந்த பொருளாதாரம் ஆரம்பிக்கப்பட்டது. சீனாவின் தலைவர்கள் மாறினாலும் கொள்கைகள் மாறுவதில்லை. சிங்கப்பூரும் ஜப்பானும் இதற்கு சிறந்த உதாரணம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் 17 வருட ஆட்சிக்குப் பின்னர் கொள்கை மாற்றங்கள் ஏற்பட்டன. 2001ஆம் ஆண்டு நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. 2015ஆம் ஆண்டு ஆகும்போது நாட்டின் கடன்சுமை அதிகரித்தது.

நாட்டில் தற்போது திறந்த பொருளாதாரக் கொள்கை ஒன்று இல்லை. சுகாதார முறைமை வீழ்ச்சியடைந்துள்ளது. பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. தமக்கு எதிர்காலம் இல்லை என மாணவர்கள் நினைக்கிறார்கள். நாட்டைவிட்டு வெளியேறவே அவர்கள் நினைக்கிறார்கள் எனவும் அவர் இதன்போது தெரிவித்தார்.





இந்தியாவிலிருந்து

## இலங்கைக்கு ரயில் பெட்டிகள் வந்துள்ளன

இந்திய அரசாங்கத்தால், இலங்கைக்கு வழங்கப்படவுள்ள 160 ரயில் பெட்டிகளில், ஒரு பகுதி ரயில் பெட்டிகள் தற்போது கொழும்பை வந்தடைந்துள்ளன. இவ்வாறு இலங்கையிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசாங்கம் 318 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் உதவி ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கைக்கு வழங்கியுள்ளது.

மேலும் இவ்வூடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதா வது;

இலங்கைக்கான 160 பெட்டிகளில், தற்போது வந்தடைந்துள்ள தொகுதியுடன் மொத்தமாக 60 ரயில் பெட்டிகள் இதுவரை இலங்கைக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. அதேவேளை, மேலும் 20 பெட்டிகள் விரைவில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அனுப்பப்படுவதற்காக தயார் நிலையில் உள்ளன.

இந்தியாவின் 318 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியின் கீழ், RITES நிறுவனமானது, இலங்கை ரயில்வே திணைக்களத்துக்கு குளிரூட்டப்பட்ட வசதிகளுடனான டீசல் ரயில்கள் (DMU) இரண்டையும் இலங்கைக்கு வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது.

இதில், 13 பெட்டிகளடங்கிய முதலாவது குளிரூட்டப்பட்ட ரயில் இந்தியாவிலிருந்து அனுப்பப்படுவதற்கு தயார் நிலையில் உள்ளதுடன் குறித்த ரயிலை இலங்கைக்கு கொண்டுவருவதற்கான கப்பலை இலங்கை அரசாங்கம் பரிந்துரைக்கும்வரை காத்திருக்கின்றது குறிப்பிடப்பட்டுள்ளது.

## எந்தவொரு விசாரணைக்கும் நான் தயாராக இருக்கின்றேன்



எனக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளதாக கூறுபவர்கள், வரலாறு தெரியாதவர்கள் எனத் தெரிவித்துள்ள ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத்குமார, தான் எந்தவொரு விசாரணைக்கும் தயாராகவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (20) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஜகத்குமாரவுக்கு எதிராக, ஒழுக்காற்று விசாரணை செய்யவுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளமைக்கு பதிலளிக்கும் முகமாகவே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், இன்று ஆசிரியர், அதிபர் தொழிற்சங்க பிரச்சினை நீண்ட தூரம் செல்வதற்கு, அமைச்சர் சரத் வீரசேகரவின் செயற்பாடுகளே காரணமெனச் சுட்டிக்காட்டிய அவர், அவரால் தான் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட ஆசிரியர்களும் பிக்குகளும் தனிமைப்படுத்தலுக்காக இழுத்து செல்லப்பட்டனர். அதனால் தான் சமூகத்தில் அது தொடர்பில் அதிகம் பேசப்பட்டது. எனவே எனக்குத் தெரிந்த வரையில் அவர் இவ்வாறான செயற்பாடுகள் மூலம் ஹிட்லராகப் பார்க்கின்றார்.

அத்துடன், 20ஆவது திருத்தம், மாகாண சபைத் தேர்தல் வேண்டாம் என கட்சியின் அபிப்பிராயத்துக்கு அப்பால் செயற்பட்டவர் வீரசேகர தான். அன்று மாகாண சபைத் தேர்தலை வைத்திருந்தால் நாம் பெரும்பான்மையில் வெற்றிப் பெற்றிருப்போம். ஆனால், இப்போது வைத்தால் நாம் வெற்றி பெறுவோமா என்பதே கேள்விக்குறி. அதனை இல்லாமல் செய்தது சரத் வீரசேகர தான் என்றார்.

ஆர்ப்பாட்டம் செய்பவர்கள் தீவிரவாதிகள் என கூறும் அவர், மறுபுறம் உண்மை விடயங்களைக் கதைப்பவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணையை முன்னெடுக்கப் போகிறாராம். எனக்கெதிராக ஒழுக்காற்று விசாரணைகளை முன்னெடுப்பதற்கு முன்னர், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசத்துக்கு எதிராக விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். எனக்கு எதிராக விசாரணைகள் முன்னெடுக்கப்படுமாயின் சில அமைச்சர்களின் மறைக்கப்பட்ட விடயங்கள் வெளியே வந்துவிடும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

2015ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்து வீட்டுக்குச் சென்ற போது, அவரை முதன் முதலாக தங்காலையில் கூட்டமொன்றை ஏற்பாடு செய்து, அவரை மேடையில் ஏற்றியது நான்தான் என்றும் தெரிவித்த அவர், இப்போது கூறும் அமைச்சர்கள் அப்போது ஊழல், மோசடிக்குப் பயந்து ஒளிந்தே இருந்தனர்.

எனவே, அமைச்சர்கள் இருவரைத் திருப்திப்படுத்தவதற்காக ஒழுக்காற்று விசாரணைகள் நடத்தப்படுவதாக தம்மை பயமுறுத்துவார்களாளின் அதற்கு அஞ்சுபவன் நான் அல்ல.

அவ்வாறு செய்வதாயின், முதலாவதாக சாகர காரியவசத்துக்கு எதிராக செய்ய வேண்டும். ஏனெனில் அமைச்சர் உதயகம்மன்பிலவுக்கு எதிரான காகிதாகிகளை ஊடகங்களில் காட்சிப்படுத்தி நாடகத்தை நடத்தியவர் அவர் என்பதால் அவரிடமிருந்து ஒழுக்காற்று விசாரணைகளை ஆரம்பிக்கவும் என்றார்.

## லொஹானை கைது செய்வதில் கால தாமதம்

இரண்டு சிறைச்சாலைகளுக்குள் நுழைந்து, கைதிகளை அச்சுறுத்திய சம்பவம் தொடர்பில் பதவி விலகியுள்ள இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்தவத்தவுக்கு எதிராக சட்டநடவடிக்கைகளை எடுப்பதற்கு கால தாமதம் ஏற்படுவதாகச் சிறைக் கைதிகளை பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் சட்டத்தரணி சேனக பெரேரா தெரிவித்துள்ளார்.

சிறைக் கைதிகளை பாதுகாக்கும் அமைப்பின் தலைவர், இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், லொஹான் ரத்வத்தவுக்கு எதிராக, விரைவாக சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இது தொடர்பில் தாம் சி.ஐ.டியில் முறைப்பாடு செய்துள்ள போதிலும், இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இச்சம்பவம் தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்கு தொடர உள்ளதாகவும், கைதிகளை அச்சுறுத்திய சம்பவம் இடம்பெற்று ஒருவாரம் ஆகிறது. பிணை வழங்காது கைது செய்ய முடியும் எனவும் சிறைக் கைதிகளை பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் இதன்போது எடுத்துரைத்தார்.

ஞானசாரரின் எச்சரிக்கை தொடர்பில்



## சி.ஐ.டியினர் விசாரணை வேண்டும்

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலைப்போல மீண்டும் ஒரு தாக்குதல் நடைபெறலாமென பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் எச்சரித்துள்ளமை தொடர்பில் சி.ஐ.டியினர் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விஜேபால ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், புலனாய்வுப் பிரிவினருக்கு முன்கூட்டியே கிடைத்த தகவலை சரியாக கவனிக்கவில்லை என்பதாலேயே உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலை தடுக்க முடியாமற்போனது. எனவே, ஞானசாரரின் கருத்துத் தொடர்பில் சி.ஐ.டியினர் விசாரணைகளை விரைவாக ஆரம்பிக்க வேண்டும் எனவும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்கள் சுவாசிக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆனால், ஆட்சியாளர்கள் வெளிநாடுகளுக்கு உல்லாசப் பயணங்களை மேற்கொள்கிறார்கள். இவ்வாறு வெளிநாடுகளுக்கு செல்பவர்கள் அனைவரும் நாட்டிலுள்ள டொலர்களை எடுத்துச் சென்று செலவு செய்கிறார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இராணுவ வீரர்கள் மீது தாக்குதல்;

## ஓய்வுபெற்ற இராணுவ வீரர் கைது

அளுத்கம துசித குமார டி சில்வா



தனிப்பட்ட காரணங்களுக்காக இரு இராணுவ வீரர்களை தாக்கிய ஓய்வுபெற்ற இராணுவ வீரர் ஒருவர் அளுத்கம பொலிஸாரால் கைது நேற்று (20) கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, சந்தேக நபரைக் கைது செய்ய அவரது வீட்டுக்குச் சென்ற அளுத்கம பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார் மீது தடியொன்றால், ஓய்வு பெற்ற இராணுவ வீரர் தாக்குதல் நடத்த முயற்சித்துள்ளபோது, இரு பொலிஸாருக்கு சிறியளவில் காயங்கள் ஏற்பட்டதாகவும் பொலிஸார் கூறுகின்றனர்.

இதனைத் தொடர்ந்து அளுத்கம பொலிஸ் நிலையத்துக்குத் தகவல்கள் வழங்கப்பட்டு மேலதிகமாக பொலிஸார் வரவழைக்கப்பட்டே சந்தேகநபரை கைது செய்ததாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்படும்போது சந்தேகநபர் நன்றாக போதையில் இருந்ததாகவும், கைது செய்து பின்னர் வைத்தியரிடம் முன்னிலைப்படுத்தி இதனை உறுதி செய்துகொண்டுள்ளதாகவும் அளுத்கம பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## வெலிகமவில் டெங்கு அபாயம்



### ஏழு பேருக்கு டெங்கு நோய்

கொரோனா வைரஸுக்கு மத்தியில் வெலிகமவில் டெங்கு பரவும் அபாயம் காணப்படுவதாக அப்பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வெலிகமவில் புதிதாக 7 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதோடு, பாடசாலைகள், தற்காலிகமாக மூடப்பட்டுள்ள அரச நிறுவனங்களுக்கு அருகில் டெங்கு குடம்பிகளை அவதானிக்க முடிவதாகவும் வெலிகம நகர சபையின் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி நாமல் நுவான் குமார தெரிவித்துள்ளார்.

## சிவாஜிலிங்கம் குணம்

எஸ். நிதர்ஷன்



வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்து, நேற்றைய தினம் (20) வீடு திரும்பினார்.

இவருக்கு, செப்டெம்பர் 11ஆம் திகதியன்று, கொரோனா அறிகுறிகள் காணப்பட்ட நிலையில், அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதில் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

இதையடுத்து, கோப்பாய் தனிமைப்படுத்தல் முகாமில் 10 நாள்களாக சிகிச்சை பெற்று வந்த நிலையில், இவர் நேற்றைய தினம் குணமடைந்து வீட்டுக்கு திரும்பினார்.

## 77ஆம் யுகத்துக்கு கொண்டு சென்றுள்ளனர்



நாட்டை தொழில்நுட்ப யுகத்துக்கு அழைத்துச் செல்வதாகக் கூறிக்கொண்டு, ஆட்சிக்கு வந்தவர்கள், நாட்டை 1977ஆம் ஆண்டு யுகத்துக்கு அழைத்துச் சென்றுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரல தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களின் உணவுகளை இருவேளையாக சுருக்கிய அரசாங்கம், இலட்சக் கணக்கில் ஆளுங்கட்சி எம்.பிகளுக்கு சம்பளத்தை வழங்கி வருவதாகவும், நாட்டின் வரலாற்றில் மோசமான, வேலைத்திட்டங்களற்ற, தோல்வியடைந்த ஜனாதிபதி, அரசாங்கம் இது எனவும் அவர் தெரிவித்தார்.

பாடசாலை வேலைத்திட்டங்கள், கொரோனா வைரஸ் ஒழிப்புக்கான வேலைத்திட்டங்கள் என எதுவுமே இந்த அரசாங்கத்திடம் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

**அறிவித்தல்**

**மஹாவெலி கொகனட் பிளான்டேஷன்ஸ் பிஎல்சி – PB 191 PQ**
**வருடாந்த பொதுக்கூட்டம் (AGM) 2021**

நாட்டில் நிலவும் சூழ்நிலை காரணமாக, வழமைப் போன்று பங்குதாரர்களுக்கு தனிப்பட்ட முறையில் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும் பொதுக்கூட்ட அறிவித்தல் வருடாந்த அறிக்கை (இறுவட்டு மூலம் மற்றும் அது சம்பந்தப்பட்ட விபரக்கோவைகளை இம் முறை அனுப்பிவைக்க முடியாதுள்ளது.

ஆதலால் 2021 செப்டெம்பர் மாதம் 01 ஆம் திகதி கொழும்பு பங்குச் சந்தையின் (CSE) இணையத் தளமான https://www.cse.lk/pages/company-profile/company-profile.component.html?symbol=MCPL.N0000 இல் வருடாந்த பொதுக் கூட்டம் அறிவித்தல், வருடாந்த அறிக்கை பொரக்ஸி படிவம் மற்றும் இணையத்தளத்தின் ஊடாக நடைபெறவுள்ள நிகழ்நிலை கூட்டத்தில் பங்குபெற்றுவதற்கு பதிவுசெயவதற்கான விண்ணப்பப்பத்திரம் போன்ற அனைத்து ஆவணங்களும் இதன் மூலம் உங்கள் கவனத்திற்கு பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணங்கள் 2021 செப்டெம்பர் மாதம் 27 ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு இணையத் தளத்தின் ஊடாக நடைபெறவுள்ள வருடாந்த பொதுக்கூட்டத்திற்கு பங்குதாரர்களுக்கு அனுப்பப்படும் சட்டப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆவணங்களாக இதை ஏற்றுக்கொள்ளும்படி இத்தால் அறிவிக்கின்றோம்.

பங்குபற்ற விரும்பும் பங்குதாரர்கள், தயவுசெய்து தாமதமின்றி, மேற்குறித்த இணையத்தளங்களில் கிடைக்கப்பெற்ற விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்து 2021 செப்டெம்பர் மாதம் 25 ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு முன்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

mcpl@sltnet.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு ஈ-மெயில் மூலமாகவோ அல்லது கூரியர் மூலமாகவோ அல்லது அந்த படிவங்களின் நகல்களை இல.06, பலஹேனமுல்லா ஒழுங்கை, கிருலப்பனை, கொழும்பு 06 இல் உள்ள கம்பெனி செயலாளர் அலுவலக முகவரிக்கு கூட்டம் ஆரம்பமாகும் குறித்த நேரத்தின் 48 மணித்தியாலங்களுக்கு முன்னராக அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**இயக்குநர் சபையின் அறிவுறுத்தலின் பிரகாரம்**
**கம்பனி செயலாளர்**
**கே.ஏ.எல். ரூபசிங்ஹ**
**2021 செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி**

போலியான தகவல்களை

# ‘நம்ப வேண்டாம்’

எம்.எஸ்.எம். ஹனீபா




போலியான தகவல்களை நம்பாமல், 20 வயதுக்கு மேற்பட்ட சகலரும் கொரோனா தடுப்பூசியை பெற்றுக் கொள்ளுமாறு, கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஆர்.எம்.தௌபீக், நேற்று (20) கேட்டுக்கொண்டார்.

தடுப்பூசி தொடர்பாக தவறான அபிப்பிராயங்களோடு சிலர் இன்னும் தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளாமல் இருக்கின்றார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்துக்கென வழங்கப்பட்ட தடுப்பூசிகள் கணிசமான அளவு கிடைக்கப்பெற்று, ஒவ்வொரு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

30, 60 வயதுக்கு மேற்பட்டோர்களுக்கும், முதலாவது தடுப்பூசி 100 சதவீதமும், இரண்டாவது தடுப்பூசி 90 சதவீதமும் செலுத்தப்பட்டுள்ளது.

தற்போது 20 வயது தொடக்கம் 29 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதோடு, தடுப்பூசிகள் தொடர்ந்தும் கிடைக்கப்பெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

இதுவரை தடுப்பூசியை பெற்றுக் கொள்ளதாத 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் உடனடியாக அருகிலுள்ள தடுப்பூசி ஏற்றும் மையங்களுக்குச் சென்று தடுப்பூசியை கட்டாயம் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுள்ளார்.

அண்மையில் ஏற்பட்ட மரணங்களில் 76 சதவீதமான மரணங்கள் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளாதவர்களென அறிக்கை கிடைக்கப்பெற்றுள்ளது. இரு தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்டவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் அவர்களின் பாதுகாப்பு அதிகமாகக் காணப்படுகின்றது.

கடந்த ஒகஸ்ட் 3ஆம், 4ஆம் வாரங்களில் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பு, டெல்டா வைரஸின் பரவலும், அதன் தாக்கமும் அதிகமான நோயாளர்களும் மரணங்களையும் சம்பவித்துள்ளன.

ஆனால், இம்மாதத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு குறைவடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.




இராணுவத்தில் இணைய

## இளைஞர்களுக்கு நேர்முகப் பரீட்சை

எச்.எம்.எம்.பர்ஸான்

இலங்கை இராணுவத்தில் இளைஞர்களை இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், கிழக்கு மாகாணத்தில் பல இடங்களில் இதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன்படி, இராணுவத்தில் இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை, வாழைச்சேனை பிரதேச செயலகத்தில் இன்று (21) தொடக்கம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 02ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதில், 18-26 வயதுக்குட்பட்ட அனைத்து இன இளைஞர்களும் இணைந்து கொள்ள முடியும்.

அவ்வாறு இணைந்து கொள்ள வருகை தரும் இளைஞர்கள், தங்களின் தேசிய அடையாள அட்டையுடன் சமூகமளிக்குமாறு, இராணுவ அதிகாரிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.



மயக்க மருந்து நிபுணராக

## வைத்தியர் சஹீர் நியமனம்

வி.சுகிர்தகுமார்

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் மயக்க மருந்து நிபுணராக வைத்தியர் எம்.என்.என்.எம். சஹீர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர், தனது கடமையை, வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எம்.எச்.எம்.அசாத் முன்னிலையில் பொறுப்பேற்றார்.

பல்வேறு வைத்தியசாலைகளில் கடமையாற்றிய இவர், இடமாற்றம் பெற்று அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டார்.

இதன்மூலம், அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் நீண்ட காலம் மயக்க மருந்து நிபுணர் இல்லை எனும் குறைபாடு நிவர்த்திக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருகோணமலைக்கு அமைச்சர் நாமல் விஜயம்

ஏ.ஈம்.ஏ.பரீட்




அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்‌ஷ, உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு, திருகோணமலை மாவட்டத்துக்கு இன்று (22) காலை விஜயம் செய்கிறார்.

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான கபில நுவான் அத்துக்கோரளவின் அழைப்பையேற்று, இந்த விஜயம் இடம்பெறுகிறது. இதன்போது, அமைச்சர் நாமல், பல்வேறு நிகழ்வுகளிலும் கலந்துகொள்ளவுள்ளார்.

மொரவெவ, குச்சவெளி, நாவச்சோலை, வெள்ளமணல், தம்பலகாமுவ 96, கந்தளாய் - லீலரத்னே உள்ளிட்ட விளையாட்டு மைதானங்கள், பல வீதிகளையும் திறந்துவைக்க உள்ளதுடன், பல்வேறு பகுதிகளில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றிய கலந்துரையாடலிலும் ஈடுபடவுள்ளார்.

குப்பையில் சிக்கிய

## முகவரிகளுக்கு சட்டம் பாய்கிறது



நூருல் ஹுதா உமர்

சாய்ந்தமருது, கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை ஆகிய பிரதேசங்களில் மக்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் குப்பைகள் கொட்டப்பட்டு வருவதாக முறைப்பாடு கிடைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, அந்தக் குப்பைகளில் இருந்து பெறப்பட்ட முகவரிகளை அடிப்படையாகக் கொண்டு, சட்டநடவடிக்கை எடுக்கப்படுவதாக கல்முனை மாநகர சபை பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் அர்சத் காரியப்பர் தெரிவித்தார்.

விஜயம் செய்த டொக்டர் அர்சத் தலைமையிலான சுகாதாரக் குழுவினர் இந்நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

குப்பைகளிலிருந்து முகவரி அச்சிடப்பட்ட ஆவணங்களைக் கைப்பற்றினர். 23 இடங்களில் இருந்து கைப்பற்றப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில், கல்முனையில் 20 பேரின் முகவரியும், சாய்ந்தமருதில் 23 பேரும், மருதமுனையில் 18 பேரும், நற்பிட்டிமுனையில் 17 பேருமாக அந்த முகவரிகளை அடிப்படையாக கொண்டு அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பட்டமளிப்பு நிகழ்வை

# ‘நிராகரிக்கின்றோம்’

எஸ். நிதர்ஷன்




நிகழ்நிலையில் நடைபெறவுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு நிகழ்வை முழுமையாக நிராகரிக்கின்றோமென, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக, யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், நேற்று (20) வெளியிட்ட அறிக்கையிலேயே, இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35ஆவது பட்டமளிப்பு விழா, பகுதி இரண்டானது, செப்டெம்பர் 16, 17, 18ஆம் திகதிகளில் நடத்த திட்டமிடப்பட்டிருந்ததாகவும் எனினும், ஊரடங்கு காரணமாக ஒக்டோபர் 7, 8, 9ஆம் திகதிகளில் நடத்துவதெனத் தெரிவிக்கப்பட்டு, பிற்போடப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், அந்தத் திகதிகளில் மாணவர்களை நேரில் அழைத்து, பட்டமளிப்பை நடத்துவதற்கு சுகாதார அமைச்சால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள ஒன்றியம், இந்நிலையில், இந்நிகழ்வை ஒக்டோபர் 7ஆம் திகதி நிகழ்நிலையில் நடத்துவதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் திட்டமிட்டுள்ளதாகவும் சாடியுள்ளது.

இந்தத் தீர்மானம் தொடர்பாக மாணவர்கள் மத்தியில் விருப்பமின்மை காணப்படுவதாகத் தெரிவித்துள்ள ஒன்றியம், இது தொடர்பாக செப்டெம்பர் 15ஆம் திகதியன்று துணைவேந்தருக்கு கடிதம் மூலம் தாங்கள் தெரிவித்திருந்ததாகவும் எனினும், துணைவேந்தரிடம் இருந்து சாதகமான பதில் தமக்கு கிடைக்கவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளது. நாடு வழமைக்கு திரும்பிய பின்னர், நேரடியாக பட்டமளிப்பு விழாவை நடத்த வேண்டும் என்பதே மாணவர்களின் விருப்பம் ஆகும்.

எனவே, பட்டமளிப்பு விழாவை நிகழ்நிலையில் நடத்தாமல், நேரடியாக மாணவர்களை அழைத்து பட்டமளிப்பு விழாவை நடத்துமாறு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகத்தை கோருகின்றோம் எனவும், அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஹெரோய்னுடன்

## ஆவா குழுவினர் நால்வர் கைது

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம், பரமேஸ்வரா சந்திக்கு அருகில் வைத்து, ஆவா குழுவை சேர்ந்த நால்வர் ஹெரோய்னுடன், நேற்று முன்தினம் (19) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களிடம் இருந்து வாள், பயணித்த கார் என்பவற்றை யாழ்ப்பாணம் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

ஆவா குழுவின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவர் என பொலிஸாரால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள நல்லூர், அரசடி பகுதியை சேர்ந்த முத்து என்பவர், நேற்று முன்தினம் மாலை, காரில் தனது நண்பர்களுடன் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டுள்ளார் எனும் தகவல் கிடைத்ததை அடுத்து, பொலிஸ் புலனாய்வு பிரிவினர் அவர்களின் காரைப் பின் தொடர்ந்து பரமேஸ்வரா சந்திக்கு அருகில் வைத்து வழிமறித்து சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது காருக்குள் இருந்து 3 கிராம் ஹெரோய்னை பொலிஸார் மீட்டுள்ளனர். அதையடுத்து, காரில் இருந்த முத்து உள்ளிட்ட நால்வரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

## 1,500 கிலோ கடலட்டைகள் பறிமுதல்

### சந்தேகநபர்கள் தப்பியோட்டம்



எஸ்.றொசேரியன் லெம்பேட்

‘மனோலி’ தீவு வழியாக இலங்கைக்கு கடத்திய 1,500 கிலோகிராம் கடல் அட்டைகளை, இந்திய கடலோர காவல் படை, வனவளத்துறை அதிகாரிகள் ஆகியோர் இணைந்து, நேற்று முன்தினம் (19) மாலை கைப்பற்றியுள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தில் உள்ள இந்திய கடலோரப் படை வீரர்கள், வனவள ஊழியர்கள் ஆகியோர், மன்னார் வளைகுடா கடல் பகுதியில், ஹோவர் கிராப்ட் மூலம், நேற்று கூட்டு ரோந்து நடவடிக்கைக்குச் சென்றனர்.

இதன் போது, மனோலி தீவு பகுதியில் சந்தேகத்துக்கு இடமாக நின்ற நாட்டுப்படகை அவதானித்த படையினர், அந்தப் படகை நோக்கிச் செல்லுகையில், அந்த நாட்டுப்படகில் இருந்த 4 பேர் தப்பி ஓடினர்.

இதையடுத்து, பதிவு எண் இல்லாத குறித்த நாட்டுப்படகில் இருந்து கடல் அட்டை மூட்டைகளை கைப்பற்றி, மண்டபம் வனத்துறையினர் வசம் ஒப்படைக்கப்பட்டது.



பூம்புகாரில் குடும்பஸ்தர் படுகொலை:

## மனைவியின் காதலனும் சிக்கினார்

எஸ் தில்லைநாதன்

அரியாலை, பூம்புகார் பகுதியில், சனிக்கிழமை (18) இரவு, ஒரு பிள்ளையின் தந்தையான 32 வயது குடும்பஸ்தர் ஒருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில், மற்றுமொரு சந்தேக நபரொருவர், நேற்று முன்தினம் (19) மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்டவரது மனைவியுடன் தொடர்புடைய பூம்புகாரைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞனே கைது செய்யப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவரின் மனைவி (வயது 28) வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில், இவர் கைது செய்யப்பட்டுள்ளார். மனைவியுடன் குறித்த இளைஞனுக்கு இருந்த தொடர்பு தொடர்பில் எழுந்த பிரச்சினை முற்றியே, குடும்பத்தலைவரை கொலை செய்யும் முடிவுக்கு கொண்டு சென்றுள்ளது.





## அன்பளிப்பு...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சுகநல நிலையத்தின் பாவனைக்காக யாழ்ப்பாணம் மருத்துவ பீட கனடா பழைய மாணவர்களால், நான்கு பல்ஸ் ஓக்ஸி மீற்றர்களும் டிஜிற்றல் வெப்பமானியும் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவிடம், யாழ்ப்பாணம் மருத்துவ பீட கடல் கடந்த பழைய மாணவர் அமைப்பின் (Jaffna Medical Faculty Overseas Alumni – Canada) கனடா கிளைத் தலைவர் மருத்துவர் மயில்வாகனம் மயிலாசன் இவற்றைக் கையளித்தார்.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி மருத்துவ கலாநிதி இ. சுரேந்திரகுமாரன், பதிவாளர் வி. காண்டீபன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

–எஸ். நிதர்ஷன்

## நானுஓயா வைத்தியசாலை நீர்துண்டிப்புக்கு
# அசமந்தமே காரணம்

டி.ஷங்கீதன்




நானுஓயா ஆரம்ப பிரிவு வைத்திய நிலையத்துக்கான குடிநீர் துண்டிக்கப்பட்டமைக்கு அங்குள்ள நிர்வாகத்தினரின் அசமந்த போக்கே காரணமென, நுவரெலியா பிரதேச சபை தவிசாளர் வேலு யோகராஜ் தெரிவித்தார்.

இது தொடர்பில் தெரிவித்த அவர்,

“குறித்த ஆரம்ப வைத்திய பிரிவு கட்டடமானது, ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன்உதவியுடன் அமைக்கப்பட்டதாகும். அந்தக் கட்டடமானது எந்தவிதமான அனுமதியும் இன்றி, ஆரம்ப கட்ட வேலைகள் முன்னெடுக்கப்பட்ட பொழுது, அது தொடர்பாக உரிய வரைபடங்களை நுவரெலியா பிரதேச சபையில் சமர்ப்பித்து அனுமதியை பெற்றுக் கொள்ளுமாறு நாங்கள் கடிதம் மூலம் அறிவித்திருந்தோம்”.

“ஆனால், அவர்கள் நிர்மாண வேலைகளை ஆரம்பித்து, சிறிது காலத்தின் பின்பே அதற்கான வரைபடத்தை எங்களிடம் சமர்ப்பித்தார்கள். எனவே, அதற்கு ஒரு தண்டப்பணம் அறவிடுவது, பிரதேச சபையின் நடைமுறையாகும். அதற்கான தண்டப்பணமாக 96,000 ரூபாய் அறவிடுவதற்கு தீர்மானித்து அதனையும் கடிதம் மூலம் அறிவித்திருந்தோம்”.

“ஆனால் அவர்கள் அந்தப் பணத்தை இதுவரையில் கட்டவில்லை. எனவே, குறித்த வைத்தியசாலை கட்டடத்துக்கு, எங்களுடைய பிரதேச சபை ஊடாக சேவைகளை பெற்றுக் கொடுக்க முடியாத காரணத்தால், அதற்கான நீர் வசதி துண்டிக்கப்பட்டது. இது அரசாங்கத்தின் நடைமுறையாகும்”.

தனியாராக இருந்தாலும் அரசாங்க கட்டடமாக இருந்தாலும் குறித்த தொகை செலுத்த வேண்டியதும் அனுமதி பெற வேண்டியதும் கட்டாயமாகும். இதனை மீறியே அவர்கள் செயற்பட்டுள்ளார்கள். அவர்கள் தண்டப் பணத்தை உடனடியாக செலுத்த நடவடிக்கை எடுப்பார்களானால், அவர்களுக்கான நீர் வசதியை பெற்றுக் கொடுக்க முடியும்.

“நாங்களும் பிரதேச சபை என்ற வகையில் பொது மக்களுக்கு சேவை செய்வதற்காகவே இங்கு இருக்கின்றோம். எனவே சுகாதார துறையை சார்ந்தவர்களும் அதனை உணர்ந்து கொள்ள வேண்டும். இரண்டு தரப்பினரும் ஒத்துழைப்புடன் நடந்து கொண்டால் எந்தவிதமான பிரச்சினையும் ஏற்படாது”.

“ஆனால், ஒருசிலர் தன்னிச்சையான முடிவுகளை எடுத்து செயற்படுவதன் காரணமாகவே, இவ்வாறான தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன. நீர் வசதி துண்டிக்கப்பட்டமைக்கு இதுவே முக்கிய காரணம்” எனவும் பிரதேச சபைத் தவிசாளர் வேலு யோகராஜ் மேலும் தெரிவித்துள்ளார்.

## திருத்தப்பணிகளில் ஈடுபடும் பஸ் மோதியதில்
# ஒருவர் பலி; சாரதி கைது

எம்.கிருஸ்ணா



திருத்தப்பணிகளில் ஈடுபடும் பஸ் ஒன்று மோதியதில், நபர்ஒருவர் உயிரிழந்துள்ளதாக நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

நாவலப்பிட்டி, பெனிதுடுவ பிரதேசத்தைச் சேர்ந்த 68 வயதுடைய, இரண்டு பிள்ளைகளின் தந்தையான சரத்குமார பியதாஸ என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நாவலப்பிட்டியிலிருந்து கினிகத்தேனை பகுதிக்கு பயணித்த, நாவலப்பிட்டி டிப்போவுக்குச் சொந்தமான திருத்தப்பணி சேவை பஸ், கினிகத்தேனை அநுரத்த ஆரம்ப பாடசாலைக்கு அருகில், குறித்த நபர் மீது மோதியுள்ளது.

இதன்போது படுகாயமடைந்த நபர், நாவலப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

எனினும் விபத்தை ஏற்படுத்திய பஸ்ஸின் சாரதி, மதுபோதையில் இருந்துள்ளதுடன் விபத்து தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்காது தலைமறைவாகிய நிலையில், நாவலப்பிட்டி போக்குவரத்து பொலிஸார் அவரை கைதுசெய்து, நாவலப்பிட்டி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## கணவன் கொலை:
# மனைவிக்கு விளக்கமறியல்


என்.ஆராச்சி

அவிசாவளை, நாபாவல, தைகல பிரதேசத்தில் கணவனைக் கொலை செய்த மனைவியை அடுத்த மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, அவிசாவளை நீதவான் நீதிமன்ற நீதிபதி நேற்று முன்தினம் (19) உத்தரவிட்டுள்ளார்.

இந்த மாதம் 18ஆம் திகதி இரவு தனது கணவனை பொல்லால் தாக்கி கொலை செய்த பெண்ணொருவர், நேற்று முன்தினம் (19) காலை அவிசாவளை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

அத்துடன், தினமும் மதுபோதையில் வரும் தனது கணவன் தன்னைக் கொடுமைப்படுத்துவதாகவும் அன்றைய தினமும் கணவனின் கொடுமைகளைத் தாங்கிக் கொள்ள முடியாமல், பொல்லால் பலமாக கணவனின் தலையில் தாக்கியதால், கணவன் மரணமடைந்துள்ளதாக பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலம் அளித்துள்ளார்.

இதனையடுத்து. நேற்று முன்தினம் (19) அவிசாவளை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.






# கடும் சோதனை

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளதை கடுமையாக நடைமுறைப்படுத்தும் வகையில், ஹட்டன் நகரில் நேற்று (20) காலை தொடக்கம் பொலிஸார் கடும் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். (எம். கிருஸ்ணா)

## விலை அதிகரிப்புக்காகவே அத்தியாவசிய பொருள்களுக்கு
# தட்டுப்பாடு ஏற்படுகிறது
### சோ. ஸ்ரீதரன் குற்றச்சாட்டு

கே.சுந்தரலிங்கம்



அத்தியாவசியப் பொருள்களின் விலையை அதிகரிப்பதற்காகவே, நாட்டில் அத்தியாவசிய பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது என, தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி நிதிச் செயலாளரும் மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான சோ. ஸ்ரீதரன் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள காணொளி பதிவிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, நாட்டில் அரிசி, சீனி, பால்மா வகைகள், சீமெந்து, எரிவாயு போன்றனவற்றுக்கு நாட்டில் தட்டுப்பாடு நிலவுகின்றது.

இந்தத் தட்டுப்பாட்டினைத் தொடர்ந்து, இந்தப் பொருள்களுக்கான விலைகளும் திடீரென அதிகரிக்கப்பட்டு வருவதையும் அதனை அரசாங்கம் கண்டுகொள்ளாமல் இருப்பதையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

ஒரு கிலோ பால்மா 200 ரூபாவால் அதிகரிப்பதற்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளன. பெருந்தோட்ட பகுதிகளில் அத்தியாவசியப் பொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதோடு, பொருட்களின் விலைகளும் கட்டுப்பாடின்றி அதிகரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

இதனால் பொருளாதார ரீதியில் ஏற்கெனவே பாதிக்கப்பட்டுள்ள பெருந்தோட்ட மக்கள் மேலும், பாதிப்புக்கு உள்ளாக வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே, அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடு மற்றும் அவற்றின் விலை ஏற்றம் என்பன தொடர்பில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்தி, நாட்டு மக்களுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கண்டி மாவட்ட மக்களுக்கு
# ஸ்புட்னிக் இரண்டாவது டோஸ்

நதீக தயாபண்டார

கண்டியில் கொரோனா தடுப்பூசியின் முதலாவது டோஸாக ஸ்புட்னிக் தடுப்பூசியை ஏற்றியவர்களுக்கு, இந்த வாரத்துக்குள் இரண்டாவது டோஸ் ஏற்றப்படும் என மாவட்ட சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, ரஸ்யாவிலிருந்து நேற்று முன்தினம் (19) அனுப்பப்பட்ட 1,20,000 ஸ்புட்னிக் தடுப்பூசிகள், நேற்று (20) கண்டிக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன.

கண்டி மாவட்டத்திலுள்ள 1,49,800 பேருக்கு இதுவரை ஸ்புட்னிக் தடுப்பூசியின் முதலாவது டோஸ் ஏற்றப்பட்டுள்ளதுடன், அவர்களுள் 30,000 பேருக்கு இதுவரை இரண்டாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனவே, ஏனையோருக்கு இந்த வாரத்துக்குள் இரண்டாவது டோஸ் செலுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என, கண்டி மாவட்ட தொற்றுநோயியல் விசேட வைத்தியர் பசன் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்டத்தில் முறையாக தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாலேயே, அங்கு கொரோனா மரணங்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது என்றார்.

## மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலை வளாகத்தில்
# சிரமதான பணிகள் முன்னெடுப்பு

செ.தி.பெருமாள்

மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் நேற்று முன்தினம் (19) காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

வைத்தியசாலையின் அபிவிருத்தி சங்க வேண்டுகோளுக்கிணங்க, ரெக்கார்டு கிராமத்தில் இயங்கி வரும் அதிரடிப்படையினரும் மஸ்கெலியா நகரில் இயங்கும் சுவாதி பெண்கள் ஒன்றியமும் வைத்தியசாலையின் அபிவிருத்தி குழுவும் வைத்தியசாலையில் பணிபுரியும் ஊழியர்கள் உள்ளிட்ட பலர் இணைந்து, இந்தச் சிரமதானப் பணியை முன்னெடுத்தனர்.





# மரநடுகை வேலைத்திட்டம்

எஸ்.கணேசன்

ஓசோன் படலம் தேய்வடைவது குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அதை பாதுகாப்பதற்கான தீர்வுகளை கண்டறியவும் ஒவ்வோர் ஆண்டும் செப்டெம்பர் 16ஆம் திகதி உலக ஓசோன் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

இதனை முன்னிட்டு, ஹட்டன்- கொட்டகலை கெம்பிரிட்ஜ் கல்லூரியில், ஹட்டன் பீஸ் சிட்டி ரோட்ராக்ட் கழகத்தின் ஏற்பாட்டில், மர நடுகை வேலைத்திட்டம் நேற்று முன்தினம் (19) முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வின் போது, ஹட்டன் பீஸ் சிட்டி ரோட்ராக்ட் கழகத்தின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நாட்டி வைத்தனர்.

மேலும், கொழும்பு, யாழ்ப்பாணம், ஹட்டன், குருநாகல் ஆகிய இடங்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் இச்செயற்றிட்டத்தின் மூலம் நடப்பட்டுள்ளன.

# தடுப்பூசி அட்டையிலேயே முற்றுப்புள்ளி தங்கியிருக்கிறது

பொது எதிரியான கொரோனா வைரஸ் தொற்றொழிப்பை முற்றாகத் துடைத்தெறிய வேண்டுமாயின், அனைவரும் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளவேண்டும். இல்லையேல், ஒழிக்கப்பட்டதாகக் கூறப்படும் தொற்றுநோய்கள் மீண்டும் தலைதூக்கியதைப் போல, கொரோனாவும் அவ்வப்போது தலையைத்தூக்கும்.

60 வயதுக்கு மேற்பட்டவர்களில் சுமார் ஒரு இலட்சம் பேர், இன்னமும் தடுப்பூசிகளை ஒருமுறையேனும் செலுத்திக்கொள்ளவில்லை. இளைஞர்களும் யுவதிகளும் ஒருசில வகையைச் சேர்ந்த தடுப்பூசிகளைத் தேடிக்கொண்டிருக்கின்றனர். தடுப்பூசிகளை செலுத்தும் செயற்றிட்டம் துரிதப்படுத்தப்பட்டாலும் தடுப்பூசிகளைச் செலுத்திக்கொள்ளும் ஆர்வம், மக்கள் மத்தியில் அதிகரிக்கவில்லை.

செப்டெம்பர் 15ஆம் திகதியுடன் தடுப்பூசி அட்டை கட்டாயப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், உத்தியோகபூர்வ அறிவிப்புகள் எவையுமே வெளியாகவில்லை. சில நகரங்களிலும் பொலிஸ் நிலையங்களிலும் தடுப்பூசி அட்டை கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது; இது சட்டவிரோதமான செயற்பாடாகும்.

ஒருவருடைய விருப்பத்துக்கு மாறாக, வற்புறுத்தியோ, திணித்தோ தடுப்பூசியை வழங்கமுடியாது. அது, ஜனநாயகத்துக்கும் மனித உரிமைகளுக்கும் ஏற்புடையது அல்ல. அதுமட்டுமன்றி, மருத்துவ விழுமியங்களுக்கு முரணானது. ஆனால், தடுப்பூசி செலுத்திக்கொள்வதற்கான ஆர்வத்தைத் தூண்டவேண்டும்.

60 வயதுக்கு மேற்பட்டவர்களிடத்திலும் ஆர்வத்தை தூண்டவேண்டும். இல்லையேல், நாட்டை முழுமையாகத் திறக்கமுடியாத துர்ப்பாக்கிய நிலைமையொன்று ஏற்பட்டுவிடும். தடுப்பூசி அட்டையைக் கட்டாயப்படுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டுவருவதாக, சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

முதலாவது தடுப்பூசியை செலுத்திக் கொண்டவர்களுக்கும், இரண்டு தடுப்பூசிகளையும் செலுத்திக் கொண்டவர்களுக்கும் கொரோனா வைரஸ் தொற்றியிருக்கிறது என்ற வாதத்தைப் பலரும் முன்வைக்கின்றனர். அவ்வாறானவர்களுக்கு, நாள்பட்ட நோய்கள், தொற்றா நோய்கள் இருந்திருக்கக்கூடும்.

முற்றுமுழுதாக நீர் நிரம்பியிருக்கும் ஒரு பானையில், ஒருதுளி நஞ்சு விழுந்துவிட்டால், முழு நீரும் நஞ்சாகிவிடும். அதேபோலதான், தடுப்பூசியை செலுத்திக்கொள்ளாத ஒருவருக்கு வைரஸ் தொற்றிவிட்டால், அது வெகுசீக்கிரமாக ஏனையோருக்கும் வியாபித்துவிடும். உலக நாடுகளிலிருந்து ஒழிக்கப்பட்டதாகக் கூறப்படும் வைரஸ்களில் பல, ஆண்டுகள் கடந்தும் உயிர்ப்புற்றிருக்கும் வரலாற்றையும் சற்றுப் பின்னோக்கிப் பார்க்கவேண்டும்.

வெளிநாடுகளுக்குச் செல்லும் கனவுகளுடன் இருக்கும் பலரும், ஒரிரு வகையைச் சேர்ந்த தடுப்பூசிகளைத் தேடிக்கொண்டிருக்கின்றனர். அவ்வாறானவர்களுக்கு அந்தந்த நாடுகளிடமிருந்து உத்தியோகபூர்வமான அறிவிப்பொன்று விடுக்கப்படவேண்டும். இல்லையேல் தடுப்பூசி ஏற்றும் செயற்றிட்டத்தை துரித்தப்படுத்தவும் முடியாது; வெகு சீக்கிரமாக நிறைவுக்கு கொண்டுவரவும் முடியாது. வைரஸின் பின்னாலேயே, நாமெல்லாம் காலத்தை கடத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையொன்று ஏற்பட்டுவிடும்.

தடுப்பூசி விவகாரத்தை துரிதப்படுத்தியிருப்பதைப் போல, தடுப்பூசி அட்டை விவகாரத்திலும் துரிதமான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்கவேண்டும். அதனூடாகவே முற்றுப்புள்ளியை வைக்கமுடியும் என்பதை நினைவூட்டுகின்றோம்.

## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

சலனம் உங்களை ஆட்கொள்ளும்போது, உடனடியாக உங்களுக்குப் பிடித்தமான காரியங்களில் ஈடுபடுங்கள். அதாவது, படித்தல், நல்ல பொழுதுபோக்குகள், நண்பர்களுடன் உரையாடல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

முக்கியமாக, குழந்தைகளுடன் பேசி, விளையாடுங்கள். துயர்கள், தேவையற்ற எண்ணங்கள் யாவுமே அழிந்துபோகும்.

தவறான எண்ணங்களை மீட்டு மீட்டுப் பார்ப்பது தவறானது. முடிந்தது முடியட்டும். அடுத்தவை நல்லவையாக அமையட்டும்.

பரந்த பூமியில், நற்காரியங்களைச் செய்திட, சந்தர்ப்பங்களை உருவாக்குங்கள். நூலகங்களுக்குச் சென்று, அறிவைத் தேடுக! சமூகப் பணி சுவாரஸ்யமானது. நாங்கள் செய்ய வேண்டிய நல்ல காரியங்கள் பல உண்டு. தங்கள் வீட்டின் நிலங்களைப் பசுமை பொங்க வைக்கலாம்.

துன்பங்கள் கூட தொற்றுநோய்தான். அவை அண்டாதிருக்க, நற்சிந்தனைகளை உள்ளத்தில் பதிவு செய்க!

–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

அஷ்ரபை

# நினைவு கூர்வதற்கான அருகதை

**மொஹமட் பாதுஷா**

ஓர் ஊரில் தேர்தல் பிரசாரக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. அக்கூட்டத்துக்குப் பிரதம அதிதியாக எம்.எச்.எம்.அஷ்ரப் வந்தார். வழக்கம்போல மேடையில் இருந்தவாறு, கீழே நிற்கின்ற ஒவ்வொருவரையும் நோட்டமிட்டார்.

வழக்கமாக கச்சான் கொட்டைகளை (நிலக்கடலை) விற்பனை செய்யும் அந்த நபர், சனக் கூட்டத்தின் ஒரு மூலையில் மிகச் சிரமப்பட்டு, அவற்றை விற்க முயன்று கொண்டிருந்தார்.

தலைவர் அஷ்ரப், அவரை அழைத்து வரச் சொன்னார். சந்தோசத்தில் கச்சான் வியாபாரி ஓடி வந்தார். “உங்களது கச்சான் பக்கட்டுக்களின் விலை என்ன?” என்று கேட்டார். அவர் சொன்னார். அவர் போன பிறகு, “இன்று கச்சான் வியாபாரம் செய்யப் போகின்றேன்; விரும்பியவர்கள் வந்து, எனது கையால் கச்சான் பைக்கட்டுகளை வாங்கலாம்” என்றார்.

தலைவர் கையால் ஒரு பொருளை பெற்றுக் கொள்வது என்றால், தொண்டர்கள், ஆதரவாளர்கள் அந்த வாய்ப்பைத் தவற விடுவார்களா? ஓடோடி வந்தனர்; பல மடங்கு விலை கொடுத்து அவற்றை வாங்கிச் சென்றனர். அந்தப் பணத்தை தலைவர், அந்தச் சிறு வியாபாரியிடம் கொடுத்து, நல்ல சைக்கிள் ஒன்றை வாங்கிக் கொள்ளுமாறு கூறினார்.

இது ஒரு சிறிய சம்பவம்தான். ஆனால், சமூகம் சார்ந்த அரசியலை பேசிக் கொண்டு மட்டும் இருக்கின்ற, வாய்ச்சொல் வீரர்களான முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு, இதில் நிறையவே படிப்பினை இருக்கின்றது.

மு.காவின் ஸ்தாபக தலைவரான எம்.எச்.எம். அஷ்ரப், இதைச் செய்ய வேண்டுமென்று யாரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். அந்த வியாபாரிக்கு ஒரு தொகைப் பணத்தை கொடுத்துவிட்டுச் சென்றிருக்கலாம்; அல்லது, தானே எல்லாவற்றையும் பணம் கொடுத்து வாங்கியிருக்கலாம்.

அந்த மேடையில், எவ்வளவோ வேலை அவருக்கு இருந்தும், ஒரு பொதுமகனின் சொந்த வாழ்வை மேம்படுத்த வேண்டும் என்பதற்காக, இதைச் செய்தார். மிக முக்கியமாக, சரியான நேரத்தில், சரியான முறையில் அதை நடைமுறைப்படுத்தினார்.

ஒவ்வொரு பொதுமகனினது வாழ்க்கையிலும் அரசியல், சமூக, பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்தும் விதமாக சேவையாற்றுகின்ற அஷ்ரபின் இந்தப் பண்பும் சமூகம் சார்ந்த அரசியல் கோட்பாடுகளும், அவரது மறைவுக்குப் பின்னர் இருந்த இடம் தெரியாமல் அழிந்து போயின என்றுதான் சொல்ல வேண்டும்.

முஸ்லிம் அரசியல்வாதிகளால் அஷ்ரபின் கொள்கைகளும் அவர் பெருமைகளும் மூன்று சந்தர்ப்பங்களில் பெரிதாகப் பேசப்படுகின்றன.

ஒன்று, தேர்தல் காலம்; அவரது புகைப்படத்தையும் வாசகத்தையும் எழுச்சிப் பாடல்களையும் மூலதனமாக வைத்தே, முஸ்லிம் காங்கிரஸ் மட்டுமன்றி எல்லாக் கட்சிகளும், இதுகால வரை அரசியல் செய்து கொண்டிருக்கின்றன.

இரண்டாவது, அவரது பிறந்த தினமான ஒக்டோபர் 23ஆம் திகதி. அடுத்தது, அவர் விமான விபத்தில்(?) மரணித்த செப்டெம்பர் 16ஆம் திகதி. அந்த வகையில், இந்த வருடமும் அஷ்ரபுக்கான நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இலங்கை முஸ்லிம் அரசியல் சரித்திரத்தில், மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரபின் வகிபாகம் அளப்பெரியது. இன்றிருக்கின்ற எல்லா முஸ்லிம் அரசியல்வாதிகளும் கொண்டுள்ள பாத்திரத்தை விட, பல மடங்கு கனதியானதாக அது இருந்தது. ஏனெனில், மக்களுக்கான அரசியலை அவர் செய்தார். அவர் கொண்டாடப்பட வேண்டியவர்; நினைவுகூரப்பட வேண்டியவர் என்பதில் யாருக்கும் இருவேறு கருத்துகள் இருக்க முடியாது.

இன்றிருக்கின்ற முஸ்லிம் அரசியல்வாதிகள்தான், பெரிய புத்திசாலிகள் என்று நினைத்துக் கொண்டிருக்கின்ற இளம் சமுதாயத்துக்கு, உண்மையான தலைமைத்துவம் எது என்பதைச் சொல்வதற்கு, எம்.எச்.எம்.அஷ்ரப், பாக்கிர் மாக்கார், ரீ.பி. ஜாயா உள்ளிட்ட பலரின் முன்மாதிரிகளை எடுத்துக் கூற வேண்டியுள்ளது.

இல்லாவிட்டால், இப்போது இருப்பதுதான் சிறந்த தலைமைத்துவம், இன்றிருக்கின்ற 20 முஸ்லிம் எம்.பிகளும் செய்கின்ற அரசியலையே, ‘உன்னதமான சமூக அரசியல்’ என்றும் நம்பி, ஏமாந்து விடுவார்கள். எனவே, அஷ்ரப், நிச்சயமாக நினைவுகூரப்பட வேண்டியவர் ஆவார்.

ஆனால், இன்று அவரின் பெயரால் அரசியல் செய்கின்றவர்கள், அவரது அரசியல் கோட்பாடுகளை பின்பற்றுவதாகச் சொல்கின்ற முஸ்லிம் அரசியல்வாதிகள், உண்மையில் அவ்விதம் செயற்படவே இல்லை.

ஆகவே, அஷ்ரபின் கொள்கைகளை குழிதோண்டிப் புதைத்துவிட்டு, அவரது அரசியல் வழிகாட்டுதலுக்கு மாற்றமாக சமூகத்தை மறந்து, அரசியல் செய்து கொண்டிருக்கின்ற முஸ்லிம் அரசியல்வாதிகள், மறைந்த தலைவரைக் கொண்டாடுவதற்கு என்ன அருகதையைக் கொண்டிருக்கின்றார்கள் என்பதுதான் இங்குள்ள வினாவாகும்.

ஒரு தந்தை நல்லவராக இருந்து, தனது பிள்ளைகளுக்கு நல்வழியை காட்டிக் கொடுக்கின்றார் என்றால், அவர் இறந்த பின்பு, அவரது பிள்ளைகளில் தந்தையின் வழிகாட்டுதலுக்கான பெறுபேறு வெளிப்பட வேண்டும்.

அதைவிடுத்து, குடும்பத்தை இரண்டாக, மூன்றாகப் பிரித்து, சொத்தை விற்று நாசமாக்கி, ஊருக்குள் இருந்த நல்ல பெயரையும் கெடுத்திருக்கின்ற பிள்ளைகளுக்கு, தந்தையின் பெருமையைப் பேசுவதற்கும், அவரது வழியிலேயே குடும்பத்தைக் கொண்டு செல்கின்றோம் என்று வாய்கூசாமல் பேசுவதற்கும் அருகதை கிடையாது. அதற்காக அவர்கள் வெட்கப்பட வேண்டும்.

ஆனால், சுயலாப அணுகுமுறையின் ஊடாக, முஸ்லிம் சமூகத்தை ஒரு முட்டுச் சந்துக்குள் கொண்டு வந்து நிறுத்தியுள்ள இன்றைய அரசியல்வாதிகள், அஷ்ரப்பின் கொள்கைகளைப் பின்பற்றாமல், அவற்றை சந்தைப்படுத்தி, அரசியல் இலாபம் உழைக்கவே இப்போதும் முனைகின்றமை, மிகக் கைசேதமான நிலையாகும்.

இன்றிருக்கின்ற அரசியல்வாதிகளுக்கும் எம்.எச்.எம்.அஷ்ரபுக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் உள்ளன. பணத்தை, வாகனத்தை, பதவியை, சொத்தை எல்லாவற்றையும் விட, அவர் மக்களை நேசித்தார்.

ஆரம்பத்தில் பெருந்தேசிய அரசியலில் நாட்டம் கொண்டிருந்த மர்ஹூம் அஷ்ரப், பின்னர் தமிரசுக் கட்சியுடன் இணைந்து செயற்பட்டார். ஆயுதங்கள் முன்கையெடுக்கத் தொடங்கிய பிறகுதான், முஸ்லிம்கள் தனிவழியில் பயணிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தார்.

இதன்படி, எம்.எச்.எம்.அஷ்ரபும் அவரைப் போலவே சமூக சிந்தனையுள்ள செயற்பாட்டாளர்களும் இணைந்து முஸ்லிம் காங்கிரஸை உருவாக்கினார்கள். ஆனால், முஸ்லிம் காங்கிரஸ் என்கின்ற மரத்தில், இன்று கனி சாப்பிடுகின்ற 99 சதவீதமானோர், அதன் உருவாக்கத்துக்காக ஒரு சொட்டுத் தண்ணீர் கூட ஊற்றாதவர்கள் என்பது வேறுகதை.

1989இல் திகாமடுல்ல (அம்பாறை) மாவட்டத்தில் இருந்து பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட எம்.எச்.எம்.அஷ்ரப், ஆர். பிரேதமாஸ அரசாங்கத்துடன் பேரம்பேசும் சக்தியை உரசிப் பார்த்தார்.

அதன்மூலமே, மாவட்ட எம்.பி தெரிவுக்கான வெட்டுப்புள்ளியை ஐந்து சதவீதமாகக் குறைத்தார். அதன் பின்னர், 2004ஆம் ஆண்டு சந்திரிகா அம்மையாரின் ஆட்சியில் அமைச்சராக நியமிக்கப்பட்டார். இக்காலப் பகுதியில், அவர் செய்த சேவைகள் இன்றும் பிரமிப்பாக நோக்கப்படுகின்றன.

உரிமை அரசியலையும் அபிவிருத்திசார் அரசியலையும் சமவிகிதத்தில் முன்னகர்த்திச் சென்றவர் இவர்தான். தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை உருவாக்கியமை, அவர் கொண்டிருந்த தூரநோக்குக்கான நல்ல எடுத்துக் காட்டாகும். தொழிலிலும், அதற்கான தகுதிகள் குறைவாகவும் இருந்த ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு, வீடுதேடிச் சென்று (இலஞ்சம் வாங்காமல்) தொழில்கொடுத்தார். முஸ்லிம்களுக்கு மட்டுமன்றி தமிழ், சிங்கள சமூகங்களுக்கும் சேவையாற்றினார். கோவில்கள், விகாரைகளுக்கு உதவினார். முஸ்லிம்களுக்கான அரசியலை, மற்ற சமூகங்களும் ஏற்றுக் கொள்ளும்படியான ஒரு ‘இமேஜை’ கட்டமைத்தார்.

இன்றிருக்கின்றவர்கள் போல் அல்லாமல், நாடாளுமன்ற உரைகளை சமூகத்துக்காகப் பயன்படுத்தினார். அவரவருக்குப் புரியும் மொழியில், முஸ்லிம்களின் அபிலாஷைகளை எடுத்துச் சொன்னார். இங்கு முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விடயம் ஒன்று உள்ளது.

அதாவது, ஒருவர் ஒரு தனித்துவ அடையாளத்துடனான கட்சியை உருவாக்கி, 11 வருடங்களே எம்.பியாக இருந்து, வெறும் ஆறு வருடங்கள் அமைச்சராக இருந்து, இவ்வளவு சேவையையும் செய்து விட்டுப் போய் இருக்கின்றார் என்பதாகும்.

ஆண்டாண்டு காலமாக எம்.பி, அமைச்சுப் பதவிகளை அலங்கரித்த முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள், “நாங்கள் அஷ்ரபின் சிஷயர்கள்; 15 வருடங்களாக எம்.பியாக இருக்கின்றோம்” என்று சொல்லிக் கொள்கின்ற முஸ்லிம் அரசியல்வாதிகள், தாங்கள் இதுபோல எதனைச் சாதித்துள்ளார்கள் என்று, சுய விசாரணை செய்து கொள்ள வேண்டும்.

எல்லா முஸ்லிம் அரசியல்வாதிகளும் இணைந்தும் கூட, இவ்வாறான ஒரு சேவையை இத்தனை வருடங்களாக ஏன் செய்ய முடியாமல் இருக்கின்றார்கள்? அத்துடன், அஷ்ரபுக்குப் பிறகு முஸ்லிம் சமூகத்தால், பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் அரசியல் தலைவர் ஏன் கிடைக்கவில்லை?

அதுபோல, 50 வயதில் அஷ்ரபுக்கு இருந்த தைரியம், அதைவிட வயதில் குறைந்த தற்கால முஸ்லிம் எம்.பிக்கோ அல்லது வயது கூடிய கட்சித் தலைவர்களுக்கோ தளபதிகளுக்கோ இல்லாமல் போய் இருக்கின்றது; அல்லது, ‘எதுவோ ஒன்று’ அதைத் தடுக்கின்றது.

இதனால், அஷ்ரப் விட்டுச் சென்ற இடத்திலேயே, 20 வருடங்களாக முஸ்லிம் சமூகம் நின்று கொண்டிருக்க, அரசியல்வாதிகள் மட்டும் முன்னேறி இருக்கின்றார்கள். எனவே, இவ்வாறான பின்னடைவுக்கான காரணத்தை அரசியல்வாதிகளும் முஸ்லிம் சமூகமும் சிந்தித்துப் பார்க்க வேண்டியுள்ளது.

மறைந்த தலைவர் அஷ்ரபின் கனவு என்பது, முஸ்லிம் சமூகத்திற்கு விடிவைப் பெற்றுக் கொடுப்பதாகும்.

## கடிதங்கள்

# துவரங்குளம் அடைமழையால் சேதம்



திருகோணமலை மாவட்டத்தில், கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள துவரங்குளம் வெள்ளிக்கிழமை (17) பெய்த கடும் மழையால், குளத்தின் ஆணைக்கட்டுகளின் இரண்டு பக்கங்களும் அரிப்பெடுத்துள்ளதாக பிரதேசவாசிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இக்குளம், கிண்ணியா பிரதேசத்தில் நடுஊற்று, சூரங்கல், ஆயிலியடி ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் மையப் பகுதியில் அமைந்துள்ளது. இக்குளம் கடந்த ஒரிரு தினங்களுக்கு முன்னரே, கொந்தராத்துக்காரர்களால் புனர்நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு இருந்தது.

துவரங்குளத்தின் தற்போதைய நிலையில், இதனது நிர்மான வேலைகள் முடிவடைந்து விட்டதா? இல்லை என்றால் இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி மக்களுக்கு பயனுள்ளதாக அமைந்துள்ளதா?

இந்தக் குளம், வருகின்ற மழைக் காலத்தில், அழிந்து விடாமல் நிலையாக இருக்குமா?

இக்குளத்தை சுற்றியுள்ள மக்களின் வாழ்வாதாரம், எவ்வாறு இருக்கப் போகின்றது? என மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

– ஏ.எம்.ஏ. பரீட்

சென்னை

மத்திய அரசாங்கத்தைக் கண்டித்து

# கறுப்புக் கொடி ஏந்தி ஆர்ப்பாட்டம்

மத்திய அரசாங்கத்தைக் கண்டித்து நாடு தழுவிய அளவில் நேற்று (20) முதல் எதிர்க்கட்சிகள் பல்வேறு கட்ட போராட்டங்களில் ஈடுபட்டுள்ளன. தமிழகத்தில் திராவிட முன்னேற்ற கழக தலைமையிலான கூட்டணிக் கட்சிகள் கறுப்புக் கொடி ஏந்தி ஆர்ப்பாட்டம் நடத்தின.

கடந்த மாதம் காங்கிரஸ் தலைவர் சோனியா தலைமையில் காணொளி வாயிலாக நடைபெற்ற கூட்டத்தில், மத்திய அரசாங்கத்தின் நடவடிக்கைகளைக் கண்டித்து செப்டெம்பர் 20ஆம் திகதி முதல் 10 நாள்களுக்கு போராட்டம் நடத்த எதிர்க்கட்சிகள் முடிவெடுத்தன. அதன்படி, வேளாண் சட்டங்களை திரும்பப் பெற வலியுறுத்தியும் பெற்றோல், டீசல், எரிவாயு ஆகியவற்றின்




விலை உயர்வை திரும்பப் பெறக் கோரியும் தமிழகத்தில் தி.மு.க தலைமையிலான கூட்டணிக் கட்சிகள், நேற்று கறுப்புக் கொடி ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டன.

சென்னையில் தி.மு.க எம்.பி கனிமொழி, எம்எல்ஏ, உதயநிதி, ஆ.ராசா தலைமையில் கறுப்புக் கொடி ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். வேலூர் மாவட்டம் காட்பாடியில் தி.மு.க எம்பி, கதிர் ஆனந்த் தலைமையிலும் ஆர்ப்பாட்டம் நடந்தது. அதேபோல், ராணிப்பேட்டை மாவட்ட காங்கிரஸ் அலுவலகத்தில் காங்கிரஸ் கட்சியினரும், சென்னை அசோக் நகரில் திருமாவளவன் தலைமையில் விடுதலை சிறுத்தைகள் கட்சியினரும் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

லக்னோ

உ.பி சட்டசபை தேர்தலில்

## முதலமைச்சர் வேட்பாளராக பிரியங்கா?



உத்தரப் பிரதேச சட்டசபை தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் முதலமைச்சர் வேட்பாளராக பிரியங்கா காந்தியை நிறுத்த வேண்டும் என்ற குரல்கள் வலுத்து வருகின்றன. அதேநேரத்தில் பிரியங்கா காந்திதான் இது தொடர்பாக இறுதி முடிவெடுக்க வேண்டும் என்றும் காங்கிரஸ் மூத்த தலைவர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

உத்தரப் பிரதேச சட்டசபை தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெற உள்ளது. ஆளும் பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க) ஆட்சியைத் தக்க வைப்பதில் தீவிரமாக உள்ளது. ஆனால் பா.ஜ.க அரசாங்க மீதான அதிருப்தியை அறுவடை செய்து, மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதில் சமாஜ்வாதி கட்சி கவனமாக காய்நகர்த்துகிறது. அதேபோல் பகுஜன் சமாஜ் கட்சியும் இழந்த செல்வாக்கை எப்படியாவது மீண்டும் பெற முடியுமா எனப் பார்க்கிறது.

காங்கிரஸின் பாரம்பரிய தொகுதிகள் பலவும் பா.ஜ.கவின் கோட்டைகளாகவே மாறிப் போய்விட்டன. இதனால் காங்கிரஸ் கட்சியை உயிர்ப்பித்தாக வேண்டிய நெருக்கடி இருக்கிறது. தற்போதைய நிலையில் காங்கிரஸ் கட்சியின் முதலமைச்சர் வேட்பாளராக பிரியங்கா காந்தியை முன்னிறுத்தினாலாவது கட்சியை உயிர்ப்பிக்க முடியுமா? என்கிற கருத்து பரவலாக அக்கட்சியில் இருக்கிறது.

மூத்த காங்கிரஸ் தலைவர் சல்மான் குர்ஷித் கூறுகையில், உத்தரப் பிரதேச தேர்தலில் பிரியங்கா காந்தி தலைமையில் தான் காங்கிரஸ் களம் காணப் போகிறது என்றார்.

நாமக்கல்

## காதலுக்கு கண்ணில்லை!

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையத்தில் இரவு நேரத்தில் காதலியுடன் பேசிக் கொண்டிருந்த இளைஞன் கிணற்றில் தவறி விழுந்து, சுமார் பத்து மணி நேரத்துக்கு மேலாக தத்தளித்துக் கொண்டிருந்த நிலையில் மீட்கப்பட்டார்.

பள்ளிபாளையம், புதன்சந்தப்பேட்டை பகுதியில் செயற்பட்டுவரும் தனியார் நூற்பாலையில் வெளி மாவட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் அதிகளவில் வேலை பார்த்து வருகின்றனர். இந்நிலையில் திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞன் அந்தப் பகுதியில் தங்கி வேலை பார்த்து வருகிறார். இவர் ஒருவரை காதலித்து வருகிறார். தினந்தோறும் அந்த பெண்ணுடன் அந்த இளைஞன் அலைபேசியில் பேசுவது வழக்கம். இந்த நிலையில், தனியார் நூற்பாலையில் அருகே உள்ள கிணற்றுப் பகுதியில் நின்று கொண்டு, தனது காதலியுடன் அலைபேசியில் இரவு பேசிக் கொண்டிருந்த அந்த இளைஞன் கால் தவறி, கிணற்றில் விழுந்தார். இதன் பின்னர் தன்னை காப்பாற்றுமாறு கூச்சலிட்டுள்ளார்.

ஆனாலும், இரவு நேரம் என்பதால் யாருக்கும் கேட்கவில்லை. இதனால், அந்த இளைஞர் கிணற்றிலேயே சுமார் 10 மணி நேரத்துக்கு மேலாக கிடந்துள்ளார். மேலும், காலையில் அப்பகுதி வழியே மக்கள் நடமாட்டத்தை அறிந்த இளைஞன் மீண்டும்



கூக்குரலிட்டுள்ளார். அப்போது யாரோ உதவிக்கு அழைக்கும் அவலக் குரல் கேட்கிறதே என, அவ்வழியே போனவர்கள் கிணற்றில் எட்டி பார்த்தனர். அப்போது தான் இளைஞன் தத்தளிப்பது தெரியவந்தது. இதையடுத்து மக்கள் தீயணைப்பு துறையினருக்கு தகவல் கொடுத்தனர். இதையடுத்து சம்பவம் இடத்துக்கு வந்த தீயணைப்பு துறையினர் கயிறு மூலம் அந்த இளைஞரை மீட்டு, பள்ளிபாளையம் அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். இதில் இளைஞனுக்கு கை முறிவு ஏற்பட்டது. கிணற்றில் தவறி விழுந்து பத்து மணி நேரத்துக்கு மேலாக உயிருக்கு போராடிய இளைஞரின் சம்பவத்தால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. காதலுக்கு கண்ணில்லை என்ற வசனம் இந்த இளைஞருக்கு பொருந்தும் போலவே உள்ளது. அதான் கண்மண் தெரியாமல் விழுந்துவிட்டார் என்கிறார்கள் அப்பகுதி மக்கள்.

புதுடெல்லி

## டெல்லிக்கு வந்தார் சவூதி வெளியுறவு அமைச்சர்



தெற்காசிய நாடான ஆப்கானிஸ்தான் நிலைமை குறித்து இந்தியாவும், சவூதி அரேபியாவும் நேற்று (20) ஆலோசனை நடத்தின.

சவூதி அரேபியாவின் வெளியுறவு அமைச்சர் பைசல் பின் பர்ஹான் அல் சவுத், மூன்று நாள் பயணமாக புதுடெல்லிக்கு நேற்று முன்தினம் (19) வந்தார். வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரை, அல் சவுத் நேற்று சந்தித்தார். இருதரப்பு உறவு உட்பட பல விஷயங்கள் பற்றி இருவரும் விவாதித்தனர்.

தர்மபுரி

## பொலிஸின் குடும்பத்துக்கே சாபமிட்டார் சாமியார்

ஒகேனக்கல் சுற்றுலா தளத்துக்குச் செல்ல சாமியார் ஒருவருக்கு அனுமதி அளிக்க பொலிஸார் மறுத்து விட்டனர். இதனால் அந்த சாமியார், நடுவீதியில் உருண்டு புரண்டு, பொலிஸாரின் குடும்பத்துக்கே சாபமிட்டார்.

தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் அருவிகளில் குளிக்கவும், படகு சவாரி மேற்கொள்ளவும், மீன் உணவுகளை ருசித்து சாப்பிடுவதற்கு தமிழகம் மட்டுமல்லாது, அண்டை மாநிலங்களிலிருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தருவது வழக்கம். அதிலும் சனி, ஞாயிறு ஆகிய வார இறுதி நாள்களில் சுற்றுலாப் பயணிகளின் கூட்டம் அலைமோதும்.

ஒகேனக்கல் சுற்றுலா தளம் செயற்பட மாவட்ட நிர்வாகம் அனுமதி அளிக்காததால் சுற்றுலா தளம் இன்னும்



திறக்கப்படாமலே உள்ளது.

ஒகேனக்கல் சுற்றுலா தளத்தில் உள்ள கோவிலுக்கு காரில் வந்த சாமியாரை, அனுமதி இல்லை என்று திருப்பி அனுப்ப பொலிஸார் முயற்சித்தனர். ஆத்திரமடைந்த சாமியார், நடுரோட்டிலேயே உருண்டுபுரண்டு, பொலிஸாரின் குடும்பம் 6 மாதத்தில் நாசமாக போய்விடும் என்று சாபம் விட்டு சென்றுள்ளார்.

ஹெல்விட்டாஸ் ஸ்ரீலங்கா நிறுவனம்:

## பிரதேச செயலகங்கள் ஊடாக உலர் உணவுப்பொதிகள்

ஹெல்விட்டாஸ் ஸ்ரீ லங்கா நிறுவனம், அட்டாளைச்சேனை அபிவிருத்தி சமூகத்தின் ஊடாக, 5,000 ரூபாய் பெறுமதியான 175 பொதிகள், அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஆறு பிரதேச செயலகங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாக, ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில், 20 குடும்பங்களுக்கான உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. ஹெல்விட்டாஸ் ஸ்ரீ லங்கா நிறுவனத்தின் நிதி உத்தியோகத்தர் எஸ். செல்வராஜ், அட்டாளைச்சேனை அபிவிருத்தி சமூகத்தின் தலைவர் ஐ.எல். ஹாசிம் ஆகியோர், ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி. பபாகரனிடம் குறித்த பொதிகளைக் கையளித்த நிலையில், அவை, கிராம உத்தியோகத்தர்கள் மூலமாகப் பயனாளிகளுக்கு உடன் வழங்கி வைக்கப்பட்டன.

–வி. சுகிர்தகுமார்












பிரித்தானிய, களுவாஞ்சிகுடி நலன்புரி தாய்ச் சங்கம் அனுசரணை:

## களுவாஞ்சிகுடியில் 200 குடும்பங்களுக்கு உலர் உணவு


பிரித்தானியாவில் இயங்கி வரும் களுவாஞ்சிகுடி நலன்புரி தாய்ச்சங்கத்தின் அனுசரணையில் களுவாஞ்சிகுடி நலன்புரி சங்க கிளையால், உலர் உணவுப் பொருட்கள் ஞாயிற்றுக்கிழமை (19) வழங்கி வைக்கப்பட்டன. தாய்ச் சங்க உறுப்பினர் குலேசேகரம்பிள்ளை குலந்திரன், கலந்து கொண்டு இப்பொருட்களை வழங்கி வைத்தார். அரிசி, சீனி, பருப்பு, கோதுமை மா, தேயிலை உள்ளிட்ட உணவுப் பொருட்கள் களுவாஞ்சிகுடி பகுதியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 200 குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

–வ. சக்தி


## அறங்காவலர் ஒன்றியம் உலருணவு விநியோகம்

கொரோனா ஊரடங்கு சட்டத்தால் பாதிக்கப்பட்ட ஒரு தொகுதி மக்களுக்கு, காரைதீவு அறங்காவலர் ஒன்றியம், ஞாயிற்றுக்கிழமை (19) உலருணவுப் பொதிகளை வழங்கி வைத்தது. காரைதீவிலுள்ள சகல கோவில்களிலும் வைத்து, உணவுப் பொதிகள் விநியோகிக்கப்பட்டன. அறங்காவலர் ஒன்றிய தலைவர் இரா. குடிக்கும் செயலாளர் சி. நந்தேஸ்வரன் உள்ளிட்ட பிரமுகர்கள், உலருணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர்.

காரைதீவு நிருபர் சகா







முல்லைத்தீவு:

## பெண் தலைமைத்துவ, மாற்றுத்திறனாளி குடும்பங்களுக்கு உதவி



வவுனியா 4ஆம் ஒழுங்கை, உக்கிளாங்குளத்தைச் சேர்ந்த சிவலிங்கம் ரகீஷனின் நிதி உதவியில், முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பெண் தலைமைத்துவ குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள் என 75 குடும்பங்களுக்கு தலா 2,500 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப்பொதிகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் மாதர் அமைப்பின் ஊடாக கொக்குளாய், கொக்குத்தொடுவாய், முள்ளியவளை, தண்ணீரூற்று, சிலாவத்தை போன்ற பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கு இந்த உலர் உணவுப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன.

–செ. கீதாஞ்சன்

வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டோருக்கு

## ஆயுர்வேத மருந்துப்பொதி



கொரோனா தொற்றுநோயை மக்கள் மத்தியிலிருந்து ஒழிக்கும் தேசிய வேலைத்திட்டத்துக்கு அமைவாக, கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டு வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு ஆயுர்வேத மருந்துப்பொதி வழங்கும் நிகழ்வு நிந்தவூர் அரச ஆயுர்வேத ஆராய்ச்சி தொற்றா நோய் வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் கே.எல். எம். நக்பர் தலைமையில் நடைபெற்றது.

–நூருல் ஹுதா உமர்

காந்தி இல்லம் நியூசிலாந்து நிதி அனுசரணை:

## ரூ. 2,000 பெறுமதியான 425 உலர் உணவுப் பொதிகள்

வன்னி ஹோப் நிறுவனத்தின் அவசரகால நிவாரணப் பணித்திட்டத்தின் கீழ், மக்கள் சேவை மன்றத்தால் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் ஞாயிற்றுக்கிழமை (19) உலருணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. வன்னி ஹோப் நிறுவனம் ஊடாக, காந்தி இல்லம் நியூசிலாந்து நிதியத்தின் நிதி அனுசரணையில் ரூ. 2,000 பெறுமதி கொண்ட 425 உலர் உணவுப் பொதிகள், தம்பலகாமம், பத்தினிபுரம், இலுப்பைக்குளம், சிறுபிட்டி, வாகரை, அம்பந்தனாவெளி போன்ற கிராமங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

–ஏ.எம்.ஏ.பரீட்



எருவில், பட்டிருப்பு, குருமண்வெளி:

## 300 பேருக்கு உலர் உணவுப் பொதிகள்



தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் களுதாவளை பிரதேச சபை உறுப்பினரும் சமூக சேவகருமான வினோ, எருவில், பட்டிருப்பு, குருமண்வெளி கிராமங்களில் வசிக்கும் 300 பேருக்கு, உலர் உணவுப் பொருட்களை சனிக்கிழமை (18) வழங்கிவைத்தார்.

–எஸ். சபேசன்



ஐ.பி.எல்:

# மும்பையை வீழ்த்திய சென்னை

இந்தியன் பிறீமியர் லீக்கானது (ஐ.பி.எல்), ஐக்கிய அரபு அமீரகத்தில் நேற்று முன்தினம் மீண்டும் ஆரம்பித்திருந்தது. இதில், டுபாயில் நடைபெற்ற போட்டியில், நடப்புச் சம்பியன்களான மும்பை இந்தியன்ஸை சென்னை சுப்பர் கிங்ஸ் வீழ்த்தியிருந்தது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை, பப் டு பிளெஸி, மொயின் அலி, சுரேஷ் ரெய்னா, மகேந்திர சிங் டோணியை விரைவாக ட்ரெண்ட் போல்ட், அடம் மில்னிடம் பறிகொடுத்து தடுமாறியது.

இதற்குள் அம்பாதி ராயுடுவும் காயமடைந்து வெளியேறிய நிலையில், ருத்துராஜ் கைகவாட்டின் ஆட்டமிழக்காத 88 (58), இரவீந்திர ஜடேஜாவின் 26 (33), டுவைன் பிராவோவின் 23 (08) ஓட்டங்களுடன் 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 156 ஓட்டங்களை சென்னை பெற்றது.

பதிலுக்கு, 157 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடு ளரப் திவாரி மாத்திரமே ஆட்டமிழக்காமல் 50 (40) ஓட்டங்களைப் பெற்றதுடன், ஏனையவர்கள் குறிப்பிட்ட இடைவெளிகளில் தீபக் சஹர் (2), ஷர்துல் தாகூர் (1), டுவைன் பிராவோ (3), ஜொஷ் ஹேசில்வூட்டிடம் (1) விக்கெட்டுகளைப் பறிகொடுத்தனர்.

அந்தவகையில், 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 136 ஓட்டங்களைப் பெற்ற மும்பை 20 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக ருத்துராஜ் கைகவாட் தெரிவானார்.



றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரின்


## தலைமையிலிருந்து விலகும் கோலி

இந்தியன் பிறீமியர் லீக்கின் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரின் அணித்தலைமைப் பொறுப்பிலிருந்து நடப்பாண்டு பருவகாலத்துடன் விராத் கோலி விலகுகின்றார்.

இச்செய்தியானது நேற்று முன்தினம் இரவே வெளிப்ப டுத்தப்பட்டிருந்தது. இதற்கு மூன்று நாள்களுக்கு முன்னரே இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரின் முடிவில் இந்திய அணியின் இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளுக்கான அணித்தலைமைப் பொறுப்பிலிருந்து விலகப் போவதாக கோலி அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

33 வயதாகும் கோலி, கடந்த 2013ஆம் ஆண்டு பெங்களூரின் அணித்தலைவரானதுடன், ஐ.பி.எல் ஆரம்பித்த 2008ஆம் ஆண்டு முதல் பெங்களூருடன் காணப்படுகின்றார்.

இந்நிலையில், கிரிக்கெட்டிலிருந்து தான் ஓய்வு பெறும் வரைக்கும் பெங்களூருடன் தான் காணப்படுவேன் எனக் கோலி கூறியுள்ளார்.



இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## டொட்டென்ஹாமை வீழ்த்திய செல்சி


இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில், டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 3-0 என்ற கோல் கணக்கில் செல்சி வென்றது.

செல்சி சார்பாக, தியாகோ சில்வா, என்கலோ கன்டே, அன்டோனியோ றுடிகர் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, பிறைட்டன் அன்ட் ஹொவ் அல்பியனின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் லெய்செஸ்டர் சிற்றி தோற்றது. லெய்செஸ்டர் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜேமி வார்டி பெற்றதோடு, பிறைட்டன் சார்பாக, நீல் மௌபே, டனி வெல்பக் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இத்தாலிய சீரி ஏ தொடர்:

## சமநிலையில் ஜுவென்டஸ் – ஏ.சி மிலன் போட்டி



இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான சீரி ஏ தொடரில், ஜுவென்டஸின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணிக்கும், ஏ.சி மிலனுக்கும் இடையிலான போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

ஜுவென்டஸ் சார்பாகப் பெறப்பட்ட கோலைஅல்வரோ மொராட்டாவும், ஏ.சி மிலன் சார்பாகப் பெறப்பட்ட கோலை அன்டே றெபிச்சும் பெற்றனர்.

இதேவேளை, ஹெலாஸ் வெரோனாவின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 2-3 என்ற கோல் கணக்கில் றோமா தோற்றது.



ஸ்பானிய லா லிகா தொடர்:

## வலென்சியாவை வென்ற றியல் மட்ரிட்

ஸ்பானியக் கால்பாந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகா தொடரில், வலென்சியாஅணியுடனான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் றியல் மட்ரிட் வென்றது.

றியல் மட்ரிட் சார்பாக, வின்ஷியஸ் ஜூனியர், கரிம் பென்ஸீமா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, வலென்சியா சார்பாகப் பெறப்பட்ட கோலை ஹியூகோ டுரோ பெற்றிருந்தார்.

பிரித்தானியா

தடுப்பூசி செலுத்திய பெண்களுக்கு

# மாதவிடாயில் பாதிப்பு?



கொரோனாத் தடுப்பூசியைச் செலுத்திக் கொண்ட 30, 000 க்கும் மேற்பட்ட பிரித்தானிய பெண்களுக்கு மாதவிடாயில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

லண்டனைச் சேர்ந்த விக்டோரியா மேல் எனும் வைத்தியர் மேற்கொண்ட ஆய்விலேயே இத்தகவல் வெளியாகியுள்ளது. குறித்த ஆய்வின்படி, அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: மொடர்னா அல்லது பைஸர் தடுப்பூசி போட்டுக்கொண்ட பெரும்பாலான பெண்களே தங்களுக்கு மாதவிடாயில் மாறுதல் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர். எனினும் இதற்குத் தகுந்த ஆதாரம் இல்லை. தடுப்பூசிக்கும் மாதவிடாய்க்கும் தொடர்பு இருப்பின், அது தடுப்பூசியின் நோய் எதிர்ப்புச் சக்தியின் விளைவாகக் கூட இருக்கலாம் மாதவிடாய் நீடிக்கும் என்றால் பெண்கள் கண்டிப்பாக மருத்துவ உதவிகளை நாட வேண்டும் என்றார்.

மேலும் கொரோனாத் தடுப்பூசி கருத்தரித்தலைப் பாதிக்கும் என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை எனவும், எதிர்காலத்தில் கர்ப்பத்திற்கான வாய்ப்புகள் பாதிக்கப்படும் என்பது பொய்யான கருத்துகளே எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இருப்பினும் இது தொடர்பில் விரிவான ஆய்வு ஒன்றை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.



சீனா

## 3 குழந்தைகள் பெற்றால் 11 சலுகைகள்

உலகில் அதிக மக்கள் தொகையைக் கொண்ட நாடான சீனா, நாட்டின் சனத் தொகையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பல்வேறு திட்டங்களை அமல்படுத்தி வந்த நிலையில், சனப் பெருக்கம் வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இதனால் குழந்தை பிறப்பை ஊக்கு விக்கும் வகையில் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

இரண்டு அல்லது 3 குழந்தைகள் பெற்றுக் கொண்டால் சொந்த வீட்டுக்கு மானியம் அளிக்கப்படும் என சீனாவின் கன்சு மாகாணம் அறிவித்துள்ளது.

சீனாவில் கடந்த ஒகஸ்ட் மாதம் 3 குழந்தைகள் பெற்றுக் கொள்வதற்கு சட்டரீதியாக அனுமதி அளிக்கப்பட்டது.

இந்நிலையில் கன்சு மாகாணம் இரண்டு அல்லது 3 குழந்தைகள் பெற்றுக் கொண்டால் 40,000 யுவான் (இலங்கை மதிப்பில் சுமார்12,40,000 ரூபாய்) மானியமாக வழங்குவதாகத் தெரிவித்துள்ளது.

இப்பணத்தைக் கொண்டு தம்பதியர் வீடு வாங்கலாம். அதுமட்டுமல்லாமல் குழந்தைகளுக்கு 3 வயதாகும் வரை ஒவ்வொரு குழந்தைக்கும் ஆண்டுக்கு 10,000 யுவான் (இலங்கை மதிப்பில் சுமார் 3 இலட்சம் ரூபாய்) வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுபோல் மொத்தம் 11 சலுகைகளை 3 குழந்தைகள் பெற்றுக் கொள்ளும் பெற்றோர் பெற்றுக் கொள்ளமுடியும்.



பெல்ஜியம்

## ஒக்., 1 முதல் முகக் கவசம் அணியத் தேவையில்லை

“பெல்ஜியத்தில் பெரும்பாலானோருக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டு விட்டதால், எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 1 ஆம் திகதி முதல் முகக்கவசம் அணியத் தேவையில்லை” என அந்நாட்டுப் பிரதமர் அலெக்சாண்டர் டி க்ரோ (Alexander De Croo) அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இதுவரை, ஒக்டோபர் 1 ஆம் திகதி முதல், கடைகளில் பணிபுரியும் ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் முகக் கவசம் அணியத்தேவையில்லை. எனினும், சுகாதார மையங்கள், விமான நிலையங்கள், 500க்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொள்ளும் முக்கிய நிகழ்வுகளில் முகக்கவசம் அணிவது கட்டாயம் ஆகும்.



## மீண்டும் உயிர்த்தெழுமா ‘மம்மொத்’ யானைகள்?

பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு சைபீரிய பனிப் பிரதேசங்களில் வாழ்ந்து முற்றிலுமாக அழிந்துபோன ரோமங்கள் நிறைந்த மம்மொத் (Mammoth) யானைகளை மீண்டும் உருவாக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த யானைகளின் உடற்பகுதிகளிலிருந்து டி.என்.ஏ. வை எடுத்து மரபணு பொறியியல் தொழில்நுட்பம் மூலமாக அவற்றை மீண்டும் உருவாக்கும் திட்டம் இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். கொலாஸல் என்ற நிறுவனம், இதுவரை இந்தத் திட்டத்துக்காக 15 மில்லியன் டொலர்களை அனுசரணைப் பணமாகப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மம்மொத் யானை மற்றும் ஆசிய யானையின் கலப்பினம் ஒன்றை உருவாக்கினால், அது ஏறத்தாழ சடை யானையைப் போன்றே இருக்கும் என்றும், சைபீரியாவின் பரந்த வெளிகளில் அவை விடப்படும் என்றும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஆப்கானிஸ்தான்

## மாணவிகள், ஆசிரியைகளுக்கு தடை

ஆப்கானிஸ்தானின் ஆட்சி அதிகாரத்தைத் தலிபான்கள் கைப்பற்றியதிலிருந்து அங்குள்ள பெண்களுக்கு எதிராக பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றனர். குறிப்பாக பெண்களின் ஆடைகள், கல்வி, தொழில் உள்ளிட்ட பல விடயங்களில் பல கடுமையான விதிமுறைகளை விதித்துவருகின்றனர். இந்நிலையில் ஆப்கானில் நீண்ட நாள்ளுக்குப் பின்னர் திறக்கப்பட்ட உயர் நிலைப் பாடசாலைகளில் ஆண் ஆசிரியர்களுக்கும் ஆண் மாணவர்களுக்கும் மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் மாணவிகளுக்கும் ஆசிரியைகளுக்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் அங்கு வாழும் மக்களும், உலக நாடுகள் பலவும் ஆப்கானிஸ்தானின் எதிர்காலம் குறித்துக் கவலை கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 21 செப்டெம்பர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.